REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 ஓகஸ்ட் 24 வியாழக்கிழமை

வரு. 91 இல. 200 | Thursday 24, August, 2023 | 12பக்கங்கள் | 50/-




## உயர்தர பரீட்சை முடிவுகள் செப்டெம்பர் 10 க்கு முன்னர்

### கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு




2022 உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகள் வெளியானதும் வெட்டுப்புள்ளிகளுக்கமைய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளும் 04


## 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் தலைவர்களுக்கு மிலிந்த அறிவுரை

### நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்துமாறு கோரிக்கை



13ஆவது திருத்தம் விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்த வேண்டுமென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழ் சிறுபான்மையினத்தவர்களுக்கு சமஉரிமையை வழங்க 04

## சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பினார் ஜனாதிபதி



சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இரவு 04

## நாட்டின் அமைதியைப் பேண முப்படையினருக்கும் அழைப்பு

### ஜனாதிபதியின் அறிவிப்பு சபையில் தெரிவிப்பு



நாட்டினதும் பொது மக்களினதும் அமைதியை பேண முப்படையினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (40 ஆம் அத்தியாயம்) 12 ஆம் பிரிவில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய, 04

## பாராளுமன்ற ஒழுக்கங்களை பின்பற்றத் தவறியதால்

# சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட நளின் பண்டார, வசந்த யாப்பா



- எதிர்க்கட்சி எம்பிக்களால் தலைமைக்கு அச்சுறுத்தல்
- சபாநாயகரின் மேசை மீதும் தாக்குதல்
- சபையை 10 நிமிடங்கள் ஒத்திவைத்த சபாநாயகர்

### பாராளுமன்றில் கூச்சல், குழப்பத்தையடுத்து பார்வையாளர் கலரியிலிருந்த சுற்றுலாப் பயணிகள், பாடசாலை மாணவர்களை வெளியேறுமாறு பாராளுமன்ற பொலிஸார் பணிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்ற ஒழுங்குவிதிகளை பின்பற்றாது ஆக்ரோஷத்துடனும் தன்னிச்சையாகவும் செயற்பட்டமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோர் நேற்று சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவின் உத்தரவுக்கமைய படைக்கல சேவிதர்களால் அவர்கள் இருவரும் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அது தொடர்பான சர்ச்சை காரணமாக சபை அமர்வுகள் நேற்று 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 04





## குறைந்த வருமானம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் நாளை முதல் ஆரம்பம்

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அறிவிப்பு



சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வயோதிபர்களின் கொடுப்பனவுகள், நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். ஜூலை மாதத்துக்குரிய கொடுப்பனவுகளுக்கென 2,684 மில்லியன் ரூபா நிதி சகல மாவட்ட செயலகங்களுக்கும் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளது. முதியோர் கொடுப்பனவை தபால் நிலையங்களிலும் விசேட தேவையுடையோர் மற்றும் 04

## ஒருமுறை பயன்படுத்தும் ஒன்பது வகையான பிளாஸ்டிக்குகள் தடை

### அக்டோபர் முதல் அமுலுக்கு வருகிறது



ஒருமுறை பயன்படுத்தக்கூடிய ஒன்பது வகையான பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி அல்லது விற்பனைக்கு அக்டோபர் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டினால் வெளியிடப்பட்டுள்ளதாக அதிகாரசபை தெரிவிக்கின்றது. ஒருமுறை பயன்படுத்தக்கூடிய 04

## மலையகத்தில் அதிகரிக்கும் மதுபானசாலைகள்

### கட்டுப்படுத்துமாறு இராத எம்.பி சபையில் வலியுறுத்தல்



பெருந்தோட்ட மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானசாலைகளை புதிதாக அமைப்பது பாரிய சமூக பிரச்சினைகளை தோற்றுவிக்குமென, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்குவிதிகள் விவாதத்தில் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது, 04

## வெற்றிகரமாக நிலவில் நேற்று தரையிறங்கியது சந்திரயான்



### இந்தியாவை உலகமே வியப்புடன் உற்றுநோக்கிய மகத்தான சாதனை

எம்.கே. ஷாகுல் ஹமீது

நிலவின் தென்துருவத்தில் இந்தியாவின் சந்திரயான் 03 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நேற்றுமாலை வெற்றிகரமாகத் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது. பூமியின் துணைக்கோளான நிலவை இதுவரை சந்திரயான் – 1, சந்திரயான் – 2 ஆகிய இரண்டு விண்கலங்களை அனுப்பி இந்தியா ஆய்வு செய்துள்ளது. இதன் மூலம் நிலவில் தண்ணீர் இருப்பதை இந்தியா கண்டுபிடித்தது. இந்நிலையில் நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய கடந்த ஜூலை 14 ஆம் திகதி சந்திரயான் 03 விக்ரம் லேண்டர் அனுப்பி வைக்கப்பட்டது. 04

## கிளிநொச்சியில் 13 வர்த்தகர்கள் கைது

### தண்டப்பணம் செலுத்தியபின் விடுவிப்பு



காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை, விலைகளை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை 04

### டிசம்பருக்குள் உள்ளூரில் தன்னிறைவடைந்தால்


## இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி நிறுத்தப்படும்



உள்ளூர் சந்தையில் முட்டைகளை 30 மற்றும் 35 ரூபாய்க்கு தட்டுப்பாடின்றி வாங்கும்போது, இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென 04

### மோட்டார் சைக்கிள் மோதி

## பாதசாரி கடவையில் பயணித்தவர் பலி



களுத்துறையில் பாடசாலைக்கு முன்பாகவுள்ள பாதசாரிக் கடவையில் பயணித்தவர், மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தார்.

களுத்துறை சிறிகுருச பகுதியில் (22) மாலை இச் 04



# நகர்வலம்



## மாத்தறை நகர அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

### அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பங்கேற்பு

**வெலிகம தினகரன் நிருபர்**



மாத்தறை நகர அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலொன்று மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மின் வலு அமைச்சர் கஞ்சன விஜேசேகர தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், மாத்தறை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட ஆற்றங்கரை பூங்காவை மக்கள் பாவனைக்காக திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், இரண்டாம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திட்டம் வகுத்தல், மாத்தறை கோட்டை அபிவிருத்தி சம்பந்தமாக முதல் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல், மற்றும் மாத்தறை கோட்டையில் அமைந்துள்ள பண்டைய கட்டடங்களை சீர்திருத்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன.

இதில் மாவட்ட செயலக அதிகாரிகள் , மாத்தறை மாநகர சபை அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## ரத்வத்தை தோட்ட சம்பவத்தை அரசியலாக்க முற்படக்கூடாது

### அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்கிறார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



### விரைந்து நடவடிக்கையெடுத்த அமைச்சர் ஜீவனை பாராட்டுகிறேன்

மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தி தண்டனை வழங்கப்பட வேண்டுமென, ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் (22) தெரிவித்தார். இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், எதிர்க்கட்சியினர் அதனை அரசியலாக்க முற்படக்கூடாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். சபாநாயகர் கூறுவது போல் நாட்டின் பல இடங்களிலும் சில, அதிகாரிகள் முறையற்ற வகையில் செயற்படுவதாலேயே, சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

அதனை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் செய்ய முற்படக் கூடாது. அது தவறு.

சம்பவ இடத்திற்குச் சென்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்தமை, எதிர்க்கட்சினருக்கு தாங்க முடியாதுள்ளதென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வரட்சியான காலநிலையால் சுமார் 7500 ஏக்கர் வயல் நிலங்களுக்கு அச்சுறுத்தல்

### ஹம்பாந்தோட்டை விவசாயிகள் கவலை தெரிவிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டமெங்கும் தற்பொழுது நிலவிவரும் வரட்சியான காலநிலையின் காரணமாக இம்முறை பெரும்போக நெல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 7500 ஏக்கர் வயல்கள் பாரிய அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இவற்றில் 730 ஏக்கர் வயல்கள் தற்பொழுது முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. மரக்கரி, பழங்கள் உட்பட சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவந்த 60 ஏக்கர் நிலமும் வரட்சியினால் பாதிப்படைந்துள்ளது. தொடர்ந்தும் வரட்சியான காலநிலை நிலவிவருவதினால் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்ப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.



சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஷ்வரனை சென்னையிலுள்ள துணைத்தூதரகத்தில் சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஶ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் பீடத்தின் இணைப்பாளர் கலாநிதி எஸ். சிவனேச சர்மா ஆகியோர்கள் சந்தித்து கலந்துரையாடிய பின்னர், வாழ்த்து மடல் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

### மின்சாரத்தை துண்டிக்கச்சென்ற

## மின்சார சபை ஊழியர் மீது தடியடி தாக்குதல்

### தலாவ பொலிஸ் பிரிவில் சம்பவம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தலாவ ஜயகங்க பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மின்சாரத்தை துண்டிப்பதற்குச் சென்ற பணியாளர்கள் இருவரில் ஒருவரை நாய் கூண்டில் இருந்த தடியால் தாக்கியமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாக தலாவ பொலிஸார் (21) தெரிவித்தனர்.

கெக்கிராவ மின்சார அதிகார பகுதிக்குட்பட்ட தலாவ ஜயகங்க பகுதி வீடொன்றின் மின்சாரத்தை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ஒப்பந்த நிறுவனத்தின் பணியாளர்கள் இருவர் குறித்த வீட்டின் மின்சாரத்தை துண்டிப்பதற்கு வந்துள்ளதாக பணியாளர்கள் வீட்டுரிமையாளரிடம் தெரிவித்துள்ளனர். அந்தவேளையில் தாயும் மகனும் வீட்டில் இருந்துள்ளனர். மின்சாரத்தை துண்டிக்க வேண்டாம் நிலுவையில் உள்ள மின் கட்டணத்தை அன்றைய தினமே செலுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதும் மின்சாரத்தை துண்டிக்குமாறு மேலதிகாரிகள் எங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் போது நாங்கள் சொல்வதை உங்களால் செவிசாய்க்க முடியாதா என கோபமடைந்த நபர், தாக்குதலை நடத்தியுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய நபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## சமுத்திரங்கள் மாசடைதலை தவிர்க்கும் வேலைத்திட்டம்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் சமுத்திரங்கள் மாசடைதலைத் தவிர்க்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக திடீரென எண்ணெய் கசிவு ஏற்படுகையில் செயற்படுத்தக்கூடிய தேசிய திட்டமிடலைப் புதுப்பிக்கும் செயலமர்வும் நிபுணத்துவ கலந்துரையாடலும் உலக உணவு அமைப்பின் அனுசரணையில் கொழும்பு கிங்ஸ்பேரி ஹோட்டலில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றது. இச்செயலமர்வில் சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அசேல பி ரெகவ உரையாற்றுவதையும் செயலமர்வில் கலந்து கொண்டுள்ளவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## தம்புத்தேகம தபால் நிலையம் உடைப்பு; ரூ. 1 இலட்சம் பணம், முத்திரைகள் திருட்டு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



தம்புத்தேகம தபால் நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்து பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த 1 இலட்சத்து 14 ஆயிரம் ரூபா பணம் மற்றும் முத்திரைகளையும் திருடிச் சென்றுள்ளதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தபாலகம் தம்புத்தேகம பொலிஸ் நிலையத்திலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. தபால் நிலைய ஜன்னல் உடைக்கப்பட்டு கம்பிகள் அகற்றப்பட்டு உட்புகுந்து பணம் மற்றும் முத்திரைகளை திருடிச் சென்றுள்ளனர். குறித்த சம்பவத்தில் தனிநபர் அல்லது ஒரு குழுவினர் தொடர்பு கொண்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார் அநுராதபுரம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் கைரேகை சோதனை உத்தியோத்தகளும் பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அறபா தேசிய பாடசாலையில் 'Back to School' நிகழ்வு



வெலிகம அறபா தேசிய பாடசாலை 'Back to school' நிகழ்வை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கிரிக்கெட் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இறுதிப் போட்டிக்கு பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அணியும் தெரிவாகின. இதில் பாடசாலை மாணவர் சங்கம் வெற்றி பெற்றதோடு சிறந்த பந்து வீச்சாளராக ஆசிரியர் பி.வி. பரத்தும் சிறந்த துடுப்பாட்ட வீரராக மாணவர் நவீட்டு தெரிவானார்கள். அணி வீரர்களையும் இரண்டாமிடம் பெற்ற அணியினரையும் படங்களில் காணலாம். விருதுகளை பாடசாலை அதிபர் முதஹ்ஹர் வழங்கி வைத்தார்.



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவ, மாணவிகள் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு கடந்த வாரம் கொழும்பு வந்திருந்தனர். இதன்போது அவர்கள் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்துக்கும் வருகை தந்து நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் கூட்டாக எடுத்துக்கொண்ட படம்.

## அம்பலாந்துவை இல்மாவில் சின்னம் சூட்டும் நிகழ்வு

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**



பாணந்துறை அம்பலாந்துவை இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் றிஸ்மி மஹ்றூப் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக களுத்துறை வலயக் கல்விப்பணிமனையின் தமிழ் பிரிவின் பணிப்பாளர் எம்.ரி.எம். இல்யாஸ், கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவின் களுத்துறை வலய ஆலோசகர் எம்.என். எம். மொஹமட் , அல் பஹ்ரியா மத்திய கல்லூரியின் அதிபர் எம்.ரிஸான், கொரெதொடுவ முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.எச். முத்தலிப், அலவியா முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜே.எம்.புர்கான், இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் நஜிமுதீன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## மிஹிந்தலை நகரில் ஏற்றுமதி வலயம் அமைக்க அரசு திட்டம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மிஹிந்தலை நகரில் ஏற்றுமதிப் பொருட்களை ஒன்றுசேர்க்கும் ஏற்றுமதி வலயமொன்றினை (அப்பனாயன களாப்ப) அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் முதற்கட்டமாகவே அநுராதபுரம் மிஹிந்தலை நகரங்களுக்கிடையிலான ரயில் பாதை திருத்தும் பணிகள் அண்மையில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் உற்பத்தி செய்யும் ஏற்றுமதிப் பொருட்களை மிஹிந்தலை நகரில் அமைக்கப்படவுள்ள களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி ஏற்றுமதிக்கு ஏற்றவிதத்தில் தயார்ப்படுத்தி மிஹிந்தலை நகரிலிருந்து ரயில் மூலம் கொழும்பு துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பெருந்தெருக்களில் ஏற்படும் வாகன நெரிசலை தவிர்த்துக்கொள்ள முடியும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 24 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
லுஹர் - 12.14
அஸர் - 03.25
மஃரிப் - 06.22
இஷா - 07.34

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆவணி 08
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

### கொவிட்19 சடலங்கள் விவகாரம்:

# நிபுணர் குழுவின் வழிகாட்டலை பின்பற்றியே நல்லடக்கம் நடந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொவிட்19 தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த நிபுணர்களின் வழிகாட்டல்களுக்கு அமையவே நல்லடக்கம் செய்யப்பட்டதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ரவூப் ஹக்கீம் எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் எம்பி தமது கேள்வியின் போது,

கொரோனா காலத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்யும் விடயத்தில் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலகளை பின்பற்றாது சுகாதார அமைச்சு தன்னிச்சையாக செயல்பட்டுள்ளது.

தன்னிச்சையாக செயல்பட்டுள்ள சுகாதார அமைச்சு மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டுமென தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் நியதிகளை பின்பற்றாது சொந்தமாக தயாரித்த முறைகளை பயன்படுத்தியே, சுகாதார அமைச்சு அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்றும், அதற்காக சுகாதார அமைச்சு பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அவரது கேள்விக்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல:

இவ்விடயம் தொடர்பில் என்னால் விமர்சனங்களை முன்வைக்க முடியாது. நிபுணர்கள் குழுவின் வழிகாட்டல்களை

04

# முச்சக்கரவண்டி சேவைகளை ஒழுங்கு படுத்த விஷேட திட்டம்

## அதிகாரிகள் குழுவினருடன் அமைச்சர் பேச்சு



தொழில்ரீதியான பயணிகள் போக்குவரத்து, முச்சக்கரவண்டி சாரதிகளின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு அமைச்சர் பந்துல குணவர்தன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள பல முச்சக்கரவண்டி சங்கங்களின் சாரதிகள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினருடன் பேச்சுவாரத்தை நடத்திய பின்னரே,அமைச்சர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் இதில்,கலந்துரையாடப்பட்டன.

முச்சக்கரவண்டிச் சங்கத்தின் பிரதிநிதிகள் தொழிற்சங்கங்கள் என்ற வகையில் தமது அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் சிலவற்றை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.மேல்மாகாணத்தில் முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான வேலைத்திட்டத்தை

04

# அரச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை

## G.C.E O/L, A/L பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வழிகாட்டல்



நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஏற்கனவே 8,000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 5,500 பட்டதாரி ஆசிரியர்களும், 2,500 இரண்டாம் மொழி ஆசிரியர்களையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் கல்வி அமைச்சர் என்ற வகையில் கல்வித் துறையின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தி வருகிறார். கல்வித் துறையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்வதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு, எமது மாணவர்களை தயார்படுத்த வேண்டியதன் அவசியம். இதற்காக விஞ்ஞானம், தொழினுட்பம், பொறியியல், கலைத் துறை, கணிதவியல் உள்ளிட்ட பாட விடயதானங்களை உள்ளடக்கிய வகையில் "STEAM" என்ற தொனிப்பொருளில் எதிர்காலத்தில் கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை மாணவர்கள் தமது நேரத்தை வீணாகக் கழிப்பதைத் தவிர்க்கும் வகையில், அவர்களுக்கு ஆங்கிலம், தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சிகளுடன் கூடிய பாடநெறிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இது, மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும்.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன . தற்போது பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கவும் மேலும் இரண்டாம் மொழி ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கும் அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கண்டி எசல பெரஹராவில் யானைகள் மிரண்டு ஓட்டம்

## மக்கள் சிதறி ஓடியும், குளத்தில் பாய்ந்தும் தப்பினர்

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

கண்டி எசல பெரஹராவின் இரண்டாவது கும்பல் பெரஹராவின் போது, இரண்டு யானைகள் திடீரென குழம்பியதால் பெரஹராவை கண்டுகளித்துக் கொண்டிருந்த மக்கள் பதற்றமடைந்து சிதறி ஓடினர்.

கண்டி தெப்பக்குளத்தின் மதில் சுற்று வட்டத்தில் நின்ற மக்களில் சிலர், தெப்பக்குளத்தினுள் குதித்தனர். இதன்போது பொலிஸ் உயிர்காப்புக் குழுவினர் மற்றும் கடற்படையினரால் அவர்கள் மீட்கப்பட்டனர்.

நாத்த தேவாலயத்தின் ஊர்வலத்தில் கலந்து கொண்ட முதல் யானை குழம்பி ஓடியதில் அச்சமடைந்த பாகன், யனையை விட்டு கீழே குதித்துள்ளார். இந்த யானை குழம்பி ஓடுவதைக் கண்ட விஷ்னு தேவாலய பெரஹராவில் கலந்துகொண்ட மற்றைய யானையும் மிரண்டு ஓடத் தொடங்கியது. இதனைக் கண்ட மற்றைய யானைகளும் சற்று மிரண்டு அங்காங்கே சென்றன.

இரண்டு யானைகளும் தலதா வீதி வழியாக மிரண்டு ஓடியபோது ஒரு யானை குயின்ஸ் ஹோட்டலின் தாழ்வாரத்தில் புகுந்து இடையூறு செய்தது. மிரண்டு ஓடி இடையூறு செய்த இரண்டு யானைகளையும் ஊர்வலத்திலிருந்து

04

## இத்தாலி, ஜேர்மன், பிரிட்டன், அயர்லாந்து

# 02 புதிய தூதுவர்கள், 01 உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ்கள் கையளிப்பு



இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமனம் பெற்றுள்ள இருவரும் உயர்ஸ்தானிகர் ஒருவரும் நேற்று (23) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

இத்தாலி குடியரசு மற்றும் ஜேர்மனி பெடரல் குடியரசு ஆகியவற்றின் இலங்கைக்கான புதிய தூதுவர்களும், பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான புதிய உயர்ஸ்தானிகருமே இவ்வாறு நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்தனர். ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த தூதுவர்களை தேசிய பாதுகாப்பு

04

# போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்குமாறு கோரிக்கை

## வவுனியாவில் சடலத்துடன் மக்கள் ஆர்ப்பாட்டம்

**வவுனியா விசேட நிருபர்**

போதைப்பொருள் பாவனையை ஒழிக்குமாறு கோரியும், இறந்தவருக்கு நீதி கோரியும் வவுனியாவில் சடலத்துடன் ஆர்ப்பாட்டமொன்று (22) நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் மதுபானசாலைக்கு சென்ற இளம் குடும்பஸ்தரை, அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் தாக்கி, நிலத்தில் தள்ளியுள்ளனர்.

இதன்போது இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்து, வவுனியா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில், வவுனியா, மஹாஇறம்பைக்குளம் காந்தி வீதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று (22 ) பூந்தோட்டம்

04

# இராணுவத்தினரால் வீடுகள் கையளிப்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

வீடற்ற வறுமையான குடும்பங்களை தெரிவு செய்து வீடுகளை வழங்கும் செயற்றிட்டத்தை,இராணுவத்தின் 241 ஆவது படைப்பிரிவு முன்னெடுத்து வருகிறது.

இதற்கிணங்க ஆலையடிவேம்பு இத்தியடி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்று, வறிய குடும்பத்துக்கு கையளிக்கப்பட்டது.மத நல்லிணக்கம் மற்றும் சமூக சேவை நலன்கருதி அக்கரைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம் வர்த்தக சமூகத்தினரின் நிதியுதவியில், இவ்வீடு நிர்மாணிக்கப்பட்டது. இராணுவத்தின் 24ஆவது படைப்பிரிவின்

04

# அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வட பகுதிக்கு திடீர் விஜயம்

## ஆளுநர் உட்பட பலதரப்பினருடனும் சந்திப்பு



**யாழ். விசேட நிருபர்**

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று (23) வட மாகாண ஆளுநர் பி எஸ் எம் சார்ள்ஸை சந்தித்து பேச்சு நடத்தினார். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பலாலி விமான நிலையம் வழியாக யாழ்ப்பாணத்தை சென்றடைந்தார். வட மாகாணத்துக்கான சமூகப் பொருளாதார சவால்கள்

04

# தொழில் ஆவணம் எதுவுமின்றி கட்டார் சென்றோர் நாடு திரும்பல்

வேலை வாய்ப்பு தேடி கட்டாருக்குச் சென்று எந்த தொழிலும் கிடைக்காமல் திரும்பி வந்த இரண்டு இளைஞர்கள் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

வேலை வாய்ப்புக் கடிதம், வேலை ஒப்பந்தம் உள்ளிட்ட எவ்விதமான ஆவணமுமின்றி , இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து இவர்கள் கட்டாருக்கு வேலைக்குச் சென்றுள்ளனர்.

அங்கு வேலை கிடைக்காமல், இரண்டு மாதங்கள் அங்கேயே தங்கியிருந்து சொந்த செலவில் இவ்விருவரும் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் தொடர்பான தகவல்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் குடிவரவு அதிகாரிகளால் வெளிப்படுத்தப்பட்டது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்வதற்கு இந்த இரண்டு கடிதங்களில் ஒன்றை வைத்திருப்பது அவசியமாகும். இவர்கள், இருவரும் நிகவெரட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞர்களென தெரியவந்துள்ளது.

கட்டாரிலுள்ள இலங்கை தொழில் வழங்கும்

04

# ஷாப்டர் மரணித்தபோது அணிந்திருந்த ஆடைகளை ஆய்வு நடத்தி அறிக்கையிடவும்

## CIDயினருக்கு நீதிமன்றம் புதிய அறிவுறுத்தல்



வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டர் அணிந்திருந்த ஆடைகளை வைத்திய நிபுணர் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு, குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்க இராசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் தற்போது வைக்கப்பட்டுள்ள மேற்படி ஆடைகளை மீட்டு, தினேஷ் ஷாஃப்டரின் மரணத்துக்கான காரணத்தை கண்டறிய நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய வைத்திய நிபுணர் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறே கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார். கொழும்பு நீதவான்

04

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

### போதைப்பொருள்... (03ஆம் பக்கத் தொடர்)

மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இதன்போது, மதுபானம் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைக்கு எதிராகவும், இறந்தவருக்கு நீதி கோரியும் பதாதைகளை ஏந்தியவாறு சடலத்துடன் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### அமெரிக்க தூதுவர்... (03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் வாய்ப்புகள் தொடர்பாகவும் ஆளுநருடன் இவர் கலந்துரையாடினார். யாழ்ப்பாணம் பொது நூலகத்தையும் ஜூலிசங் பார்வையிட்டார். அத்துடன் வட மாகாணத்தின் மேலும் பல பிரமுகர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

### தொழில் ஆவணம்... (03ஆம் பக்கத் தொடர்)

தரகர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தலா 05 இலட்சம் கொடுத்துவிட்டு கடந்த ஜூன் மாதம் 17ஆம் திகதி அங்கு வேலைக்குச் சென்றுள்ளனர்.

ஐந்து வருடங்கள் நாட்டில் தங்கி வேலை செய்வதற்குத் தேவையான விசாக்கள் தங்களிடம் இருப்பதாக தரகர் கூறியிருந்தார். ஆனால் கட்டாரிலுள்ள தோஹா விமான நிலையத்தில், அந்நாட்டு குடிவரவு அதிகாரிகள் இருவருக்கும் 90 நாட்கள் நாட்டில் தங்குவதற்கு தேவையான சுற்றுலா விசாக்களை வழங்கியுள்ளனர். இரண்டு இளைஞர்களும் கட்டாரில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்து வேலை கிடைக்காமல், நேற்று முன்தினம் சொந்த செலவில் நாடு திரும்பியுள்ளனர்.

மேலும் 11 இலங்கை இளைஞர்கள் வேலையின்றி இலங்கைக்கு திரும்ப முடியாமல் இவ்விளைஞர்கள் தங்கியிருந்த விடுதியில், இருப்பதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

### ஷாப்டர் மரணித்தபோது ... (03ஆம் பக்கத் தொடர்)

நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய முன்னிலையில், இவ்வழக்கு நேற்று அழைக்கப்பட்டது. இதன்போது, அங்கு முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.வர்த்தகர் இறந்த இடத்திலும், அவரது வாகனத்திலிருந்து மீட்கப்பட்ட பொருட்களையும் வைத்திய நிபுணர் குழுவிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணை அடுத்த மாதம் (05) திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### இராணுவத்தினரால் வீடுகள்... (03ஆம் பக்கத் தொடர்)

கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்தரசிறி அண்மையில் (20) இவ்வீட்டை உரிய பயனாளிக்கு கையளித்தார். இந் நிகழ்வில், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், நன்கொடையாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### நிபுணர் குழுவின்... (03ஆம் பக்கத் தொடர்)

அடிப்படையாகக் கொண்டே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனால், இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும். உங்களின் வேண்டுகோள் தொடர்பில் அந்த குழுவின் அறிக்கையை முன்வைப்பேன். இதனை உணர்வுபூர்வமான விடயமாக கருதி சட்டபூர்வ தன்மை தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கையை சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கண்டி எசல பெரஹராவில்... (03ஆம் பக்கத் தொடர்)

அகற்றிய பின்னர், ஏற்பாட்டுக் குழுவினர் ஊர்வலத்தை தொடர்ந்து நடத்தினர். இச்சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

கால்நடை மருத்துவ குழுவினரும், பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவ பீடத்தினரும் யானைகளை பரீட்சிக்கும் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### 02 புதிய தூதுவர்கள்... (03ஆம் பக்கத் தொடர்)

தொடர்பான ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க வரவேற்றார்.

நற்சான்று பத்திரங்களை கையளித்தவர்களின் விபரம் கீழ்வருமாறு,

01. பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக் (Andrew Patrick)

02. ஜேர்மனி பெடரல் குடியரசின் தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியூமன் (Felix Neumann)

03. இத்தாலி குடியரசின் இலங்கைக்கான தூதுவர் டாமியானோ பிரான்கோவிக் (Damiano Francovigh)

நற்சான்று பத்திரங்களைக் கையளித்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

### முச்சக்கரவண்டி... (03ஆம் பக்கத் தொடர்)

நெறிப்படுத்துதல், நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான கூட்டு வேலைத் திட்டத்தை தயாரித்தல், கட்டணங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

முச்சக்கர வண்டிகள் உட்பட பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் ஒழுங்குபடுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளதுடன், அதற்கான திருத்த சட்டமூலம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் அமைச்சர் தெரிவித்தார்.

#### தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில்

## பழனியாண்டி கனகராஜாவின் கவிதை நூல் வெளியீட்டு விழா






கலைச்சுடர் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜாவின் எண்ணங்களின் வண்ணங்கள் எனும் கவிதை நூலின் வெளியீட்டு விழா ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் கலாபூஷணம் அருண் தியாகு தலைமையில் பசறை நூலக கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்குஇடம்பெறவுள்ளது.

ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் வெளியீட்டு அனுசரணையிலும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையிலும்இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமாரும் கௌரவ அதிதிகளாக சிரேஷ்ட சட்டத்தரணி பதுளை சேனாதிராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் பீ.ஆறுமுகம், அதிபர் வீ.திருலோகசங்கர், அதிபர் எஸ். ராஜேந்திரா ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலாநிதி இரா.புஸ்பகாந்தன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆர்.சுஜித்தா, திருமதி கிருஸ்ணபிரியா ,உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம். ரட்ணகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். இதில் விசேட அதிதியாக 1000 (கவிஞர்கள் கவிதைகள் ) செயலியக்குநர் யோ.புரட்சியும் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வின் முக்கிய அம்சங்களாக வரவேற்பு நடனம், தனி நடனங்கள், குழு நடனம் , வாழ்த்துப்பாக்கள், வாழ்த்துரைகள், ஏற்புரை, கருத்துரை, நூல் அறிமுகவுரை, பாடல், நாட்டார் பாடல் மற்றும் பல்வேறு சிறப்புரைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### உயர்தர பரீட்சை...

நடவடிக்கைகள் விரைவாக ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்

### 13ஆவது திருத்தம்....

13ஆவது திருத்தம் முயல்கிறது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தற்போது இது தொடர்பில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால், தமிழ் தலைவர்கள் நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.இந்திய ஊடகம்

அவரது கருத்தை செய்தியாக வெளியிட்டுள்ளது. அரசியல் தீர்வை அடைந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அரசியல் தலைவர்களை கடந்த சில மாதங்களாக சந்தித்து வருகின்றார். இவ்விவகாரத் தில் பாராளுமன்றத்தின் கருத்தொருமைப்பாட்டை பெற ரணில் முயல்வதாகவும் இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது. ஜனநாயகத்தில் இது சவாலான விடயமென தெரிவித்துள்ள மிலிந்த மொரகொட, வெவ்வேறு குழுக்கள் வெவ்வேறு கருத்தை கொண்டிருப்பது வழமை. வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் ஜனாதிபதி பேசுவதாக தெரிவித்துள்ள மிலிந்த மொரகொட, கிழக்கின் முக்கிய அபிவிருத்தியாக திருகோணமலை அமையப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சிங்கப்பூரிலிருந்து ...

(22) நாடு திரும்பினார். ஜனாதிபதி தலைமையிலான ஏழு பேர் கொண்ட தூது குழு, தனது சுற்று பயணத்தை நிறைவு செய்து நாடு திரும்பியதாக கட்டுநாயக்க விமான நிலைய செய்திகள் நேற்று அறிவித்தன. இவ்விஜயத்தில்,சிங்கப்பூர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட இராஜதந்திரிகளை சந்தித்த ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

### நாட்டின் அமைதியைப்....

பொது மக்களின் அமைதியை பேணுவதற்காக ஆயுதம் தாங்கிய படையின் சகல உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ (23) சபையில் நேற்று அறிவித்தார்.

பொதுமக்களின் அமைதியைப் பாதுகாக்கும் நோக்கில், நேற்று முன்தினம் முதல் (22) நடைமுறைக்கு வருமாறு இக்கட்டளை மூலம் இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை வான்படை ஆகியவற்றுக்கு அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

### மலையகத்தில்...

சுற்றுலாத்துறை கைத்தொழில் அபிவிருத்தி மிக முக்கியமானது.நாட்டின் பல்வேறு பகுதிகளை சுற்றுலா மையங்களாக அடையாளப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளை சுற்றுலாத்துறை மையங்களாக அடையாளப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறோம்.

2018 ஆம் ஆண்டு இலங்கைக்கு 23 இலட்சம் சுற்றுலா பயணிகள் வந்தனர்.இதனால், 4.3 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் அரசாங்கத்துக்கு கிடைத்தது.

மொத்த அந்நிய செலவாணியில் 13 முதல் 15 சதவீதம் அளவிலான வருமானம் சுற்றுலாத்துறை சேவைக் கைத்தொழில் ஊடாக கிடைக்கப்பெறுகிறது.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை விரிவுப்படுத்தும்போது பலருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.ஆகவே சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

சுற்றுலாத்துறை கைத்தொழிலை விரிவுப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு, மலையக பகுதிகளில் மதுபான சாலைகளை அமைப்பது முறையற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் டயகம பகுதியில் மதுபான சாலைகளை அமைக்க அரசாங்கம் எடுத்த தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.ஆனால், தற்போது நுவரெலியா பகுதியில் மதுபானசாலைகளை அமைக்க நோட்டீஸ் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு உறுப்பினர் ஆளும் தரப்புக்கு மாறிச் சென்றால் அவருக்கு மூன்று மதுபானசாலைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

அரசியல் நோக்கத்துக்காக மலையக மக்களின் வாழ்க்கையை இல்லாதொழிக்க வேண்டாம் என்றார்.

### வெற்றிகரமாக...

இந்த விண்கலம் கடந்த 40 நாட்கள் பயணித்து நிலவை எட்டியது. முதலில் புவி வட்டப்பாதையில் சுற்றிய சந்திரயான் 03 விக்ரம் லேண்டர், அதன்பின்னர் நிலவின் வட்டப்பாதையில் சுற்றி கொஞ்சம் கொஞ்சமாக உயரம் குறைக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று மாலை 05.45 மணிக்கு இதன் உயரம் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் நிலவை நோக்கி மெதுமெதுவாக இறக்கப்பட்டது. 30 கி.மீ உயரத்திலிருந்து லேண்டர் கொஞ்சம் கொஞ்சமாக தரையிறக்கப்பட்டது.

11.5 நிமிடத்தில் விக்ரம் லேண்டர் 7.4 கிமீ உயரம் வரை கொண்டு வரப்பட்டது. 1.68km கிமீ / நிமிடம் என்ற வேகத்தில் இந்த லேண்டர் களமிறங்கியது. அதன் பின் இதன் வேகம் குறைக்கப்பட்டு கடைசி 10 மீட்டர் வரை கொண்டு செல்லப்பட்டது. அதன் பின் இதன் உயரம் மற்றும் வேகம் குறைக்கப்பட்டு தானியங்கி லேண்டிங் சிஸ்டம் மூலம் விக்ரம் லேண்டர் நேற்று மாலை 06.04 மணிக்கு தரையிறக்கப்பட்டது.

ஏற்கனவே 'சந்திரயான் 02' விண்கலம் மூலம் அனுப்பப்பட்ட கருவியுடன் தற்போது அனுப்பி வைக்கப்பட்ட 'லேண்டர்' கருவி தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ரேடியோ அலைவரிசையில் இரண்டும் இயங்குவதால் எளிதாக தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. இது இந்தியாவின் ஆராய்ச்சிக்கு மிக சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய விண்வெளி ஆய்வு நிலைய (இஸ்ரோ) விஞ்ஞானிகள் இக்காட்சியை நேற்று பரபரப்புடன் உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். சந்திரயான் தரையிறங்கியதும் அவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். வெளிநாட்டு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர்நரேந்திரதென் ஆப்பிரிக்காவில் இருந்து நேரலையில் அக்காட்சியைப் பார்வையிட்டதுடன் இந்திய தேசியக் கொடியை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்து அனைவரையும் பாராட்டி உரையும் ஆற்றினார்.

### சபையிலிருந்து...

பிங்கிரிய தொகுதி மாநாடு பிங்கிரிய பிரதேச சபையில் நடத்தியமை தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார சபைக்கு தெளிவுடுத்துகையில், ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்க வேண்டாமென சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகரை கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய பிரதி நபாநாயகரும் இடமளிக்க மறுத்ததால் சபையில் கடும் சர்ச்சை ஏற்பட்டது. சபையை கட்டுப்படுத்த முடியாமல் பிரதி சபாநாயகர் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு இடைநிறுத்துவதாகத் தெரிவித்து சபையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

சபை நடவடிக்கைகள் மீண்டும் சபாநாயகரின் தலைமையில் கூடியபோது நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா அபேவர்த்தன இருவரையும் சபையிலிருந்து வெளியேறுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார்.

பாராளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவின் தலைமையில் கூடியது.

வழமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் ஆரம்பித்தது. இதன்போது வசந்த யாப்பா பண்டார தனது இடையீட்டு கேள்விகளை நேரடியாக கேட்காமல் அதற்கான விளக்கத்தை வழங்கி கேள்வியை முன்வைக்க ஆரம்பித்த போது, பிரதி சபாநாயகர் கேள்வியை சுருக்கமாக முன்வைக்குமாறு பல தடவைகள் கேட்டுக்கொண்டார்.

எனினும், அவர் தொடர்ந்து நிறுத்தாமல் தமது கருத்தை முன்வைக்க முற்பட்டதால் அவரது ஒலிவாங்கி முடக்கப்பட்டு, அடுத்த கேள்விக்குரிய உறுப்பினரின் பெயர் அறிவிக்கப்பட்டது. எனினும், அவர் தனது இடையீட்டு கேள்வியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அப்போது அவருக்குரிய சந்தர்ப்பம் வழங்கப்படாததால், எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, இடையீட்டு கேள்வியை கேட்பதற்கான உரிமையை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து டளஸ் அழகப்பெரும எம் பி யும் எழுந்து அந்த உறுப்பினருக்குரிய வாய்ப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதனையடுத்து பிரதி சபாநாயகர், அவருக்குரிய சந்தர்ப்பத்தை வழங்கினார். இதன்போது வசந்த யாப்பா பண்டார தனது கேள்வியை முன்வைத்து முடிவதற்கு முன்னர், கேள்விகளுக்கு பதிலளித்துக்கொண்டிருந்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, “யானை தொடர்பாகவே அவர் கேள்வி கேட்டிருந்தார். அது தொடர்பில் நான் ஆராய்ந்து கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பேன்” என தெரிவித்து விட்டு சபையை விட்டு வெளியேற முற்பட்டார்.

இதன்போது வசந்தயாப்பா அபேவர்த்தன, நான் எனது கேள்வியை கேட்பதற்கு முன்னர் அமைச்சர் எவ்வாறு பதிலளிக்க முடியும். அதனால் எனது கேள்வியை முன்வைக்க மீண்டும் சந்தர்ப்பம் தாருங்கள் என கேட்டுக்கொண்டார். எனினும், அவருக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பவில்லை.

அதனைத் தொடர்ந்து அடுத்த வாய்மூல விடைக்கான கேள்வியை சாணக்கியன் எம்.பி. முன்வைத்தபோது, அதற்கான இடையீட்டு கேள்வியை கேட்பதற்கான சந்தர்ப்பம் எதிர்க்கட்சி எம் பி நளின் பண்டாரவுக்கு வழங்கப்பட்டது.

நளின் பண்டார எம்.பி. தனது இடையீட்டு கேள்வியின்போது, “ஸ்ரீலங்கா பொதுஜன பெர்முனவின் பிங்கிரிய தொகுதி மாநாடு பிங்கிரிய பிரதேச சபையில் நடைபெற்றுள்ளது.

கட்சியின் தொகுதி மாநாட்டை நடத்துவதற்காகவா? பிரதேச சபை அமைக்கப்பட்டிருக்கிறது?” என மீண்டும் கேள்வி எழுப்பினார். கேள்விகளை முவைக்கும்போது, ஆளும் கட்சி பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எழுந்து, “கேள்வி நேரத்துக்கு ஒரு மணி நேரமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு மணி நேரம் முடிவடைந்தால் அமைச்சர்கள் யாரும் கேள்விகளுக்கு பதிலளிக்கமாட்டார்கள். அதனால் தேவையில்லாத கேள்விகளுக்கு இடமளிக்க வேண்டாம்” என மீண்டும் கேட்டுக்கொண்டார்.

நளின் பண்டாரவின் கேள்வி பிரதமருடன் தொடர்பு பட்டிருந்ததால், பிரதமர் எழுந்து “இது சம்பந்தமில்லாத கேள்வி இதற்கு இடமளிக்க வேண்டாம். உங்களால் சபையை வழி நடத்த முடியாதென்றால் இடைநிறுத்திவிட்டு செல்லுங்கள் “ என பிரதி சபாநாயகரைப் பார்த்து கேட்டுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து பிரதி சபாநாயகர் அடுத்த கேள்விக்கு விடை அளிப்பதற்காக பெயர் குறிப்பிட்டார். இதனால் ஆத்திரமடைந்த நளின் பண்டார, தனக்குரிய கேள்வியை கேட்பதற்கு இடமளிக்குமாறு ஆக்ரோஷமாக பிரதி சபாநாயகரைக் கேட்டுக்கொண்டு, சபாநாயகரின் ஆசனத்துக்கு அருகாமையில் சென்றார். இதனைத்தொடர்ந்து வசந்த யாப்பா அபேவர்த்தனவும் சபாநாயகரின் ஆசனத்துக்கு அருகில் சென்று கடும்தொனியில் பிரதி சபாநாயகரை அச்சறுத்தும் வகையில் தங்களுக்குரிய கேள்வி கேட்கும் சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டனர்.

அதனால் சபையில் அமைதியின்மை ஏறபட்டதால் பிரதி சபாநாயகர், அவ்விருவரையும் அவர்களது ஆசனங்களுக்கு செல்லுமாறு கேட்டுக்கொண்டனர். இருந்தபோதும் அவர்கள் இதற்கு கீழ்படியவில்லை.

சபையை கட்டுப்படுத்த முடியாமல் சபை நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதாக தெரிவித்து, காலை 10 35மணிக்கு சபை நடவடிக்கையை அவர் இடை நிறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் சபை 10, 45 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போது ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எழுந்து, நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா அபேவர்த்தன ஆகிய உறுப்பினர்கள் இருவரும் பிரதி சபாநாயகரை அச்சுறுத்தும் வகையில் அக்கிராசனத்துக்கு அருகில் சென்று செயற்பட்ட விதம் பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதிக்கும் வகையில் அமைந்திருந்தது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இவர்கள் ஒழுக்கமில்லாத வகையில் செயற்படும்போது பாராளுமன்ற கலரியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஜப்பான் சுற்றுலாப் பயணிகள் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எனவே, இவர்களின் இந்த நடவடிக்கை எமது பாராளுமன்றத்துக்கு அகௌரவத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதனால் இவர்கள் இரணடு பேரையும் இன்றை சபை நடவடிக்கைகளிலிருந்து அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கூச்சல், குழப்பம் ஏற்பட்டு சபாநாயகரின் உத்தரவுகளை பொருட்படுத்தாது எதிரணி எம்பிக்கள் இருவரும் செய்பட்டதால், பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்த ஜப்பான் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்களை பாராளுமன்ற பொலிஸார் நேற்று வெளியேற்றினர்.

இதன்போது நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோர் தங்களது செயற்பாட்டுக்கான காரணத்தை சபாநாயகருக்கு தெளிவுபடுத்தினர்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த சபாநாயகர், சபைக்குள் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லெண்ணம் இல்லை. கேள்வி கேட்பதற்கு சட்ட விதிகள் இருக்கின்றன. அதனைப் பின்பற்றியே அனைவரும் செயல்பட வேண்டும்

அத்துடன் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா அபேவர்த்தன ஆகிய இரண்டு பேரும் அக்கிராசனத்துக்கு அருகில் வந்து தலைமைக்கு அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை இந்த பாராளுமன்றத்தை அகௌரவப்படுத்தும் செயலாகும். அதனால் இன்றைய தின சபை அமர்விலிருந்து அவர்கள் இருவரையும் விலக்கிக் கொள்ளுமாறும் பின்னர் அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வோம் என்றார்.

அதனைத்தொடர்ந்து உதவி படைக்கல சேவிதர்கள் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா அபேவர்த்தன ஆகிய இருவரையும் சபையிலிருந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைய, அவர்கள் சபையிலிருந்து வெளியேறினர். அதனைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் வழமை போன்று தொடர்ந்தன.

### குறைந்த வருமானம்....

சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலகங்களிலும் நாளை வெள்ளிக்கிழமை முதல் பெற்றுக்கொள்ள முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### ஒருமுறை பயன்படுத்தும்...

குடிநீர் குவளைகள், பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள், முட் கரண்டி மற்றும் கத்திகள் உட்பட 09 பிளாஸ்டிக் பொருட்களுக்கே அக்டோபர் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவற்றின் உற்பத்தி, உள்ளூர் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்தல், விற்பனை, இலவசமாக வழங்குதல் அல்லது காட்சிப்படுத்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. இந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிகளின்படி சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது

### கிளிநொச்சியில் 13...

செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் 13 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டனர். ள்ளனர். விலை கட்டுப்பாட்டு பிரிவினரால் கிளிநொச்சி பகுதியில் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போதே இந்த 13 வர்த்தகர்களும் செவ்வாய்க்கிழமை (22) கைதாகினர்.

கைதானவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிவான் எஸ் சுபராஜினி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். காலாவதியான முகப்பூச்சு, கிரீம், பிஸ்கட், கேக் மற்றும் சோடா உள்ளிட்ட பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய ஏழு வர்த்தகர்களுக்கு தலா 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, விலைகளை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய மற்றும் விற்பனை செய்த ஆறு வர்த்தகர்களுக்கு தலா 5,000 ரூபா வீதம் முப்பது ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவிலிருந்து....

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வாலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அண்மைய மாதங்களில் 60 முதல் 65 ரூபாவுக்கு முட்டைகளை விற்பனை செய்வதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்கள் கணிசமான இலாபம் ஈட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மதிப்பீட்டின்படி சுமார் 75 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அவை லங்கா ச.தொ.ச மற்றும் பல்பொருள் அங்காடி விற்பனை நிலையங்களூடாக விற்பனை செய்யப்படுகின்றன. இதேவேளை, எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் உள்ளூர் முட்டை தன்னிறைவு அடையுமெனவும், அதன் பின்னர் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 3035 ரூபாவுக்கும் குறைவாகவே இருக்குமெனவும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

### பாதசாரி கடவையில்....

சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கருகிலுள்ள பாதசாரி கடவையில் வீதியை கடந்தவர் மீது, காலியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியது.இதில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தல்கஸ்வல பகுதியைச் சேர்ந்த அய்யப்புலி யேசுதாசன் என்ற 54 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முன்னாள் கடற்படை வீரர் மற்றும் அவரது 17 வயது மகளும் காயமடைந்து, களுத்துறை நாகொடை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# Lyca Productions இலங்கை படத்தயாரிப்பில் இணைந்தது





இந்தியாவின் மாபெரும் திரைப் பட தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான Lyca Productions, இலங் கையில் நவீன வசதிகள் படைத்த திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தை நிறுவியுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தியாவில் சிறந்த திரைப்பட தயாரிப்பு வசதிகளைக் கொண் டுள்ள நிறுவனம், இலங்கையர்க ளுக்கு திரைப்பட தயாரிப்பு தொடர் பான நவீன தொழில்நுட்ப அறிவை வழங்கி, உள்நாட்டு திரைப்படத் துறையை ஊக்குவிப்பதற்கு திட் டமிட்டுள்ளது. இந்த ஸ்தாபிப்பு தொடர்பான அறிவிக்கும் கோலாகல நிகழ்வில், உள்நாட்டு நட்சத்திரங்க ளுடன், தென்னிந்திய திரையுலகின் புகழ்பெற்ற பலரும் பங்கேற்றிருந்த னர்.

EAP Films and Theatres (Pvt) Ltd. உடன் இந்தியாவின் Lyca Productions ஏற்படுத்திக் கொண்ட மூலோபாய பங்காண்மை தொடர் பில் Lyca குழுமத்தின் தலைவர் சுபாஸ்கரன் அல்லிராஜா கருத்துத் தெரிவிக்கையில், திரைப்படத்து றையில் EAP குடுமம் நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், அக்குழுமத்துடன் இணைந்து, இலங்கையில் நவீன வசதிகள் படைத்த திரைப்பட தயாரிப்பு நிறு வனமொன்றை நிறுவுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

Lyca Productions ஸ்ரீலங்கா ஊடாக, மாபெரும் கலை வளங்க ளில் காணப்படும் இடைவெளியை நிவர்த்திசெய்து, இலங்கையில் தயாரிக்கப்படும் திரைப்படங்களை உலகளாவிய ரீதியில் சகல பிரிவுக ளிலும் சிறந்த வரவேற்பைப்பெறச் செய்வது இலக்காக அமைந்துள்ளது. காலப்போக்கில், இலங்கையர்கள் பலருக்கு நவீன திரைப்பட தயாரிப்பு நுட்பங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பதுடன், எதிர்கா லத்தில் விஸ்தரிப்புகளை மேற் கொள்வதற்காக எமது முதலீடுகளை மேம்படுத்துவோம் என்றார்.

# தேயிலை ஏற்றுமதியில் மெக்சன்ஸ் குழுமம்



இலங்கையின் வர்ணப்பூச்சு மற்றும் மெக்டைல்ஸ் முன்னணி உற்பத்தி நிறுவனமான மெக்சன்ஸ் குழுமம் தேயிலை ஏற்றுமதித் துறையில் (Macksons Tea Exports) பிரவேசித்துள்ளது. மெக்சன்ஸ் டீ என்ற பெயரில் ஏற்றுமதி செய்யப்ப டும் இதன் தொடக்க விழா கொழும் பில் அண்மையில் இடம்பெற்றது.

'எங்கள் நிலத்திற்கும் இங்கு உற் பத்தி செய்யப்படும் தேயி லையின் விதிவிலக்கான தரத்திற்கும் இடையே யுள்ள ஆழமாக வேரூன் றிய தொடர்பைப் பிரதிப லிக்கும் வகையில் எங்கள் தேயிலை சிறந்து விளங்குவ தாக மெக்ஸன்ஸ் தேயிலை ஏற்றுமதியின் பணிப்பாளர் சஜ்ஜாத் சாலிஹீன் தெரிவித் துள்ளார்.

அதிநவீன தொழில்நுட் பங்களைப் பயன்படுத்தி நவீன சந்தைப்படுத்தல் உத் திகளை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் பெருமை யையும் தேயிலையின் மீதான ஆர் வத்தையும் பிரதிபலிக்கும் உலகளா விய வர்த்தக நாமத்தை உருவாக்க நாம் எதிர்பார்க்கின்றோம். சர்வ தேச அரங்கில் ஒரு அழியாத முத்தி ரையை பதிப்பதோடு இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எமது குழுமம் தமது பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

# இலங்கையின் முதலாவது மின்னியல் டக்ஸி; DPMC யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிப்பு




இலங்கையின் முன்னணி வாகன நிறுவ னமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் தனது முன் மாதிரித் திட்டமான ஈட்ரைவ் மின்னியல் முச்சக்கரவண்டி டக்ஸி சேவையை யாழ்ப் பாணத்துக்கும் விஸ்தரிப்பதாக அறிவித் துள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வெற்றிகரமாக அறிமுகப்ப டுத்தப்பட்டதைத் தொடர்ந்து சூழலுக்கு நட்பான மற்றும் செலவுச் சிக்கனமான போக்குவரத்துத் தீர்வை வழங்கும் ஈட் ரைவ் திட்டம் யாழ்ப்பாண நகரத்துக்கும் தற்பொழுது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. மின்னியல் வாகனங்களே போக்குவரத் தின் எதிர்காலமாகியுள்ளது. இது புகை வெளியேற்றம் அல்லாத மற்றும் நிலத் தடி எரிபொருள்களில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு உதவும் வகையில் சுற்றா டலுக்கு தீங்கிழைக்காததாக அமைந்துள் ளது.

மின்னியல் டக்ஸியை அறிமுகப்படுத்தி யதன் ஊடாக கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பது மாத்திரமன்றி, எரிபொருளுக் கான செலவீனங்களைக் குறைப்பதன் ஊடாக அந்நியச் செலாவணியைச் சேமிக்க உதவுகிறது.

# Haycolour நிறுவனத்துக்கு ஏற்றுமதியினை விரிவுபடுத்த இரு சான்றிதழ்கள்

Haycolour நிறுவனம் Global Organic Textile Standard (GOTS) மற்றும் Zero Discharge of Hazardous Chemical (ZDHC) போன்ற தரமான பேண்தகைமை சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

மேலும் நிறுவனம் ஏற்றுமதி அன்னிய செலாவணியை அதி கரிக்க எதிர்பார்ப்பதுடன், பேண்தகைமையின் ஊடாக புதிய ஏற்றுமதி சந்தைகளில் வியாபாரத்தினை விரிவுபடுத்த எதிர்பார்த் துள்ளது. தற்போது Haycolour நிறுவனமானது பங்களாதேசத்தில் முதன்மை ஏற்றுமதியாளராக திகழ்ந்து வருகின்றதுடன் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுக ளில் குறுகிய காலத்தில் ஏற்றுமதி துறையில் முன்னேற்றம் கண் டுள்ளது. இலங்கையின் முதல் waterbased pigment emulsion உற் பத்தியாளரான Haycolour(Pvt) Ltd ஆனது Hayleys Aventura (Pvt) Ltd நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். மேலும் Haycolour நிறுவனமானது சுற்றாடல் சம்பந்தமான இரு பேண்தகைமை சான்றிதழ்களை பெற்று வினைத்திறனான நிபுணத்துவம் பெற்ற புத்தாக்க உற்பத்தியின் ஊடாக ஏற்றுமதி வாய்ப்புகளை தக்கவைத் துக் கொண்டுள்ளது.

# யூனியன் அஷ்யூரன்ஸின் Wonder Moms நிகழ்ச்சி



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குந ரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது யூனியன் அஷ்யூரன்ஸ் Wonder Moms நிகழ்ச்சியை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. நிறுவனத்தில் பணி யாற்றும் தாய்மாரின் பெறுமதி வாய்ந்த பங்களிப்புகள் மற்றும் அர்ப்பணிப்புகளை கொண்டாடும் வகையில் இந்த நிகழ்வு அமைந்தி ருந்தது.

இந்த நிகழ்வின் முக்கிய அங் கமாக, யூனியன் அஷ்யூரன்ஸ், தனது “யூனியன் அஷ்யூரன்ஸ் தாய் பராமரிப்பு பொதி” எனும், பிரத்தி யேகமான அனுகூலத்திட்டத்தை, யூனியன் அஷ்யூரன்ஸில் பணியாற் றும் தாய்மாருக்காக அறிமுகம் செய்திருந்தது. கருக்கட்டல் முதல் குழந்தை பிரசவித்து ஒரு வருடம் நிறைவடையும் வரை இந்த அனு கூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த அரவணைப்புப் பொதியில், பல்வேறு பெறுமதி வாய்ந்த சேவைகள் அடங்கியுள்ளன. அவற்றில், doctor oncall சேவைகள், தடுப்பூசி நினைவூட்டல்கள், ஆலோ சனைகள் மற்றும் மருந்துப் பொருட் கள் விநியோக சேவைகள் போன்றன அடங்குகின்றன.

# Ninewells Hospital ஐக்கிய நாடுகளின் UNGC உடன்படிக்கையில் இணைவு



இலங்கையில் தனியார் சுகாதாரத் துறையில் பெண்கள் மற்றும் குழந்தைப் பராமரிப்பில் முதன்மையான நிறுவ னமான நைன்வெல்ஸ் மருத்துவமனை, ஐக்கிய நாடுக ளின் (UN) சர்வதேச உடன்படிக்கையுடனான (UNGC) உடனான தனது முன்னோடி கூட்டாண்மையை பெருமை யுடன் அறிவிக்கிறது. இந்த உலகளாவிய முயற்சியுடன் இணைந்த இலங்கையின் முதல் மருத்துவமனை என்ற வகையில், இந்த நடவடிக்கை நைன்வெல்ஸ் மருத்துவம னையின் பொறுப்புணர்வுடனான வணிக நடைமுறைகள், நிலைபேண்தகைமை மற்றும் நெறிமுறை சார்ந்த சுகாதா ரப் பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்ப டுத்துகிறது.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கையானது நைன்வெல்ஸ் மருத்துவமனையின் பெண்கள் மற்றும் குழந்தைப் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதற் கான ஒரு சிறந்த தளமாக செயல்படுகின்ற அதே சமயத் தில், நிறுவன ஆட்சி நிர்வாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றின் முக்கிய கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறது. ஐக்கிய நாடு களின் சர்வதேச உடன்படிக்கையில் பங்கேற்பதன் மூலம், பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கவும், மனித உரிமை கள், தொழிலாளர் தரநிலைகள் மற்றும் ஊழல்எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்ப டுத்தவும் மற்றும் அதன் நிலைபேண்தகைமை முயற்சி களை முன்னெடுத்துச் செல்லவும் நைன்வெல்ஸ் மருத்து வமனை முயல்கிறது.

# WindForce PLC, Lakdhanavi Ltd மற்றும் The Blue Circle Pte Ltd கூட்டமைப்புடன் ஒரு புதுமையான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி



இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்ன ணியில் திகழும் WindForce PLC ஆனது இலங்கையின் முன்னணி சுயாதீன மின் உற்பத்தியாளரான (Independent Power Producer IPP) Lakdhanavi மற்றும் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த முத லீட்டு நிறுவனமான The Blue Circle ஆகியவற்றுடன் இணைந்து, ஒரு கூட்டு வர்த்தக முயற்சியை முன்னெ டுக்கவுள்ளது. இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை மாற்றியமைக்கும் வகையிலான மின் உற்பத்தித் திட்டத்தில் காலடியெடுத்து வைப்பதே இதன் நோக்கம். இந்த இலட்சிய நோக்கம் கொண்ட திட்டம், இலங்கை மின்சார சபையால் (CEB) இதுவரை அனுமதிக்கப்பட்ட மிகப் பெரிய தனியார் துறை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி முயற்சியாக உள்ளதுடன், இதன் மொத்த நேரடி முதலீடு 152 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், 2025 டிசம்பரில் இச்செயல் திட்டம் நிறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின் றது. இந்தத் திட்டம் மின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றை இணைக்கும் இலங்கையின் முதலாவது ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற் பத்தித் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் WindForce இன் ஸ்தானத்தை உறுதிப்படுத்தும் வகையில், 100 மெகாவாட் (100 MW) சூரிய மின் உற் பத்தி நிலையம், மணித்தியாலத்திற்கு 12 மெகாவாட் (12 MWh) மின்கல எரிசக்தி சேமிப்பு அதிநவீன கட்டமைப்பு (Battery Energy Storage System BESS), 2x63.5MVA, 132/33kV கொண்ட தேசிய மின்விநியோகத்திற்கான துணை மின்நிலையம், மற்றும் ஒரு விரிவான 27km, 132/33kV பரிவர்த்தனை இணைப்பு ஆகிய அனைத்தை யும் உள்ளடக்கிய ஒரு திட்டமாக இந்தத் திட்டம் அமைக் கப்படும்.

# ஏற்றுமதி சந்தை சேவைகளை மேம்படுத்த புதிய தானியங்கி மத்திய களஞ்சியம்



ஹெய்லிஸ் குழுமத்தின் அங்கத்துவரான Dipped Products PLC (DPL) நிறுவனம், முக்கியமான உலகளா விய ஏற்றுமதி தேவையை பூர்த்தி செய்ய அதன் சேவை வழங்கல் சிறப்பை மேம்படுத்தும் வகையில் பியகம ஏற் றுமதி செயலாக்க வலயத்தில் ஒரு நவீன மத்திய களஞ் சிய வசதி வளாகத்தை நிர்மாணித்துள்ளது.

இந்த புதிய களஞ்சிய வசதி DPL நிறுவனம் ஹங் வெல்ல, கொட்டாவ மற்றும் பியகம தொழிற்சாலை கள் ஊடாக களஞ்சிய வசதிகளை ஒருங்கிணைக்கவும், செயல்பாடுகளை சீரமைக்கவும், போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் செலவுகளை குறைக்கவும் உதவும். குறிப்பாக, DPL தனது தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனைத் தெளிவாகக் கண்காணிக்கவும், புதிய களஞ்சிய வசதி மூலம் செயல்பாடுகளை எளிதாகக் கட்டுப்படுத்த வும் உதவும். சுமார் 23,000 கன மீட்டர் கொண்ட இந்த நவீன மத்திய களஞ்சிய வசதி, நிறுவனத்தின் டிஜிட்டல் மயமாக்கல் வணிகத்தில் ஒரு புதிய தொழில்நுட்ப மைல் கல்லாகும். ஹேய்லிஸ் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டித்தகே இந்த களஞ்சிய வசதியை ஆரம்பித்து வைத்ததுடன் DPL பிரதித் தலைவர் ராஜித்த காரியவசம், ஹேய்லிஸ் நிறைவேற்றுப் பணிப் பாளர் சரத் கனேகொட, DPL முகாமைத்துவப் பணிப்பா ளர் புஷ்பிக ஜனதீர மற்றும் ஹேய்லிஸ் குழும முகாமைத் துவக் குழுவின் பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் DPL ஊழியர்களும் கலந்து கொண்டனர்.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 07

## குறள் தரும் சிந்தனை



இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்

*சிறப்பான நிலையுங்கூட அதற்குப் பொருந்தாத கீழ் மக்களுக்குக் கிட்டுமானால், அவர்கள் வரம்புமீறிச் செயல்படுவது இயற்கை.*

# பெருந்தோட்ட மக்களுக்கு காணிஉரிமையை வலியுறுத்தும் மாத்தளை தோட்ட சம்பவம்!

மாத்தளை மாவட்டத்திலுள்ள எல்கடுவ பிளாண்டேசனுக்கு உட்பட்ட ரத்தவத்தை தோட்ட கீழ்ப்பிரிவில் தோட்டத் தொழிலாளர் குடும்பத்தவர்கள் வசித்து வந்த தற்காலிக வீடொன்று அதே தோட்டத்தின் அதிகாரியின் தலைமையில் கடந்த வார இறுதியில் தகர்த்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அக்குடியிருப்பில் குடியிருந்ததாகக் கூறப்படும் மூன்று குடும்பங்கள் இருப்பிடத்தை இழந்துள்ளன.

இச்சம்பவம் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் கண் முன்பாகவே இடம்பெற்றுள்ளதோடு அவர்களது பிள்ளைகள் கதறி அழுத போதிலும் அவற்றைக் கருத்தில் கொள்ளாது பலவந்தமாக உடைத்து தற்காலிக குடியிருப்பு அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்திற்கு கடும் ஆட்சேபனைகளும் எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. தோட்ட உட்கட்டமைப்பு, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஸ்தலத்திற்கு சென்று உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தார். அதேநேரம் இச்சம்பவத்திற்கு பாராளுமன்றத்திலும் கடும் ஆட்சேபனைகளும் எதிர்ப்புக்களும் நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டன.

குறித்த தற்காலிக குடியிருப்பை உடைத்து அப்புறப்படுத்தியமையை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டு ஆட்சேபனை வெளிப்படுத்திய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் பிரதிநிதிகள் பதாகைகளை ஏந்தி பாராளுமன்ற சபா பீடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இச்சம்பவத்தில் ஈடுபட்ட உதவி முகாமையாளரை கைது செய்யுமாறு அவர்கள் கோரிக்கையும் விடுத்தனர். இந்நிலையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் சில நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

பெருந்தோட்ட மக்கள் என்பவர்கள் இந்நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறையில் பணியாற்றுபவர்களாவர். அவர்கள் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்பை நல்குபவர்களும் கூட. இரண்டு நூற்றாண்டுகளாக இந்நாட்டுக்காக உழைத்துவரும் இவர்கள், இந்நாட்டின் குடியுரிமையும் பெற்றவர்களும் ஆவர்.

ஆன போதிலும் இம்மக்களின் ஒரு தொகையினருக்கு இன்னும் காணி உரிமை இல்லாதுள்ளது. அவர்களுக்கு 10 பேர்ச் படி காணி வழங்கி அந்த உரிமையைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காணி உரிமை இல்லாத பெருந்தோட்ட மக்களில், மாத்தளை மாவட்டத்தின் ரத்தவத்தை தோட்ட கீழ்ப்பிரிவில் இத்துரதிர்ஷ்டகர சம்பவத்திற்கு முகம்கொடுத்துள்ள குடும்பத்தவர்களும் அடங்குவர். அவர்கள் தோட்ட நிர்வாகத்தினரிடம் பல ஆண்டுகளாக விடுத்து வந்த கோரிக்கைக்கு அமைய தோட்ட நிர்வாகத்தின் தற்போதைய முகாமையாளருக்கு முன்பாக நிர்வாகத்தில் இருந்த முகாமையாளர் வழங்கிய சிறிய காணியில் சில தினங்களுக்கு முன்னர் அக்குடும்பத்தினர் தற்காலிக குடியிருப்பை அமைத்து வசித்து வந்துள்ளனர். அக்குடியிருப்பையே தற்போதைய உதவி முகாமையாளர் தோட்ட அதிகாரிகளுடன் இணைந்து உடைத்து அப்புறப்படுத்தியுள்ளார்.

இது முற்றிலும் நியாயப்படுத்த முடியாத நடவடிக்கையாகும். இவ்விடயத்தில் தோட்ட நிர்வாகம் நேரடியாக சம்பந்தப்பட்டு சட்ட ரீதியில் அப்புறப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். இதை விடுத்து உதவி முகாமையாளர் சட்டத்தைக் கையில் எடுத்து இவ்வாறு செயற்படவே முடியாது. அதுவே எல்லா மட்டத்தினரதும் கருத்தாகும்.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த பெருந்தோட்ட அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, 'இச்சம்பவம் குறித்து அரசாங்கம் வருத்தம் தெரிவித்து கொள்வதாகக் குறிப்பிட்டதோடு, இவ்வாறான சம்பவம் உண்மையில் இடம்பெற்று இருக்கக்கூடாது. ஆன போதிலும் இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சகலருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் இவ்விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட உதவி முகாமையாளர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு விடுமுறை வழங்கப்பட்டு, எதிரான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்றும் கூறியுள்ளார்.

இச்சம்பவத்திற்கு அரசாங்கத்தின் வருத்தத்தை தெரிவித்ததன் ஊடாக ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் அமைச்சர் என்பதை அமைச்சர் ரமேஷ் பத்திரன வெளிப்படுத்தியுள்ளார். இதனை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும். அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என மக்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக காணி உரிமையற்ற பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும். அப்போது இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் இடம்பெற வாய்ப்பு இருக்காது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# அ'புரம்-மிஹிந்தலை இரட்டை ரயில்பாதையினால் ஏற்றுமதி, இறக்குமதி அபிவிருத்திக்கு அதிக வாய்ப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தன

அனுராதபுரத்திற்கும் மிஹிந்தலைக்கும் இடையில் இரட்டை ரயில்பாதை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், பொருட்கள் போக்குவரத்திற்கான வாய்ப்பினை வழங்கும் வகையில் இந்த புதியபாதை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை வரையான புகையிரதப் பாதை புனரமைப்புப் பணியினை ஆரம்பித்து வைத்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

"அனுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரையான 12 கிலோ மீற்றர் தூரம் கொண்ட புகையிரதப் பாதை புனரமைப்பு செய்யப்படவுள்ளது. நீண்டகால பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டத்தை இலக்காகக் கொண்டு இந்த ரயில்பாதை புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.



இதன்படி வடக்கு , வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உபத்தி செய்யப்படும் பொருட்களை சேகரித்து ஏற்றுமதிக்கு தயார்படுத்தும் ஏற்றுமதி செயலாக்க வலயத்தை மிஹிந்தலையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக அனுராதபுரம்_ மிஹிந்தலை சந்தி புகையிரத நிலையம் வரையிலான புகையிரத நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





மிஹிந்தலை ஏற்றுமதி வலயத்தை அமைப்பதன் மூலம் மேற்படி மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மிஹிந்தலையில் உள்ள களஞ்சியசாலை வளாகத்தில் சேகரிக்கப்பட்டு பின்னர் ரயில் மூலம் கொழும்புத் துறை முகத்திற்கு கொண்டு செல்லப்படும். அதேவேளை அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ரயில் மூலம் மிஹிந்தலைக்கு கொண்டுவரப்படும். நெடுஞ்சாலைகளில் தினமும் கொள்கலன்கள் ஓடுவதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும்.

உலகில் அபிவிருத்தி அடைந்த பல நாடுகள் புகையிரதச் சேவையை சரக்கு போக்குவரத்திற்காக பயன்படுத்தி வருகின்றன. இது மிகவும் வசதியான மற்றும் இலகுவான முறையாகும்" என அமைச்சர் பந்துல குணவர்தன அங்கு தெரிவித்தார்.

இலங்கைக்கு தற்போது நிலுவையிலுள்ள கடன் 36 மில்லியன் டொலராகும். 20 ஆண்டுகளுக்கு இடையில் மொத்தத் தொகையில் 51 வீதம் செலுத்த வேண்டும். அந்த 20 ஆண்டுகளுக்குப் பிறகும் 12 வீத கடன் தொகையை செலுத்த வேண்டும். எனவே எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்தக் கடனை செலுத்துவதற்குரிய செயற்திட்டம் இல்லாவிட்டால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் எனவும் அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டினார்.

மதார் தம்பி ஆரிப்...
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# குருநாகல் மாவட்டத்தில் இனநல்லுறவுக்காக பாடுபட்டவர் ஏ.எச்.எம்.அலவி எம்.பி



பெரும்பான்மை மக்கள் 91.9 சதவீதமாக வாழும் குருநாகல் மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் சனத்தொகை வீதம் 8.3 ஆகும். குருநாகல் மாவட்டத்தில் முஸ்லிம்கள் சிதறி வாழ்கின்றனர். பல்வேறு அரசியல் கட்சிகளும் பிரிந்து செயற்படுவதனால் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கும் வாய்ப்பை அவர்கள் இழந்து வருகின்றனர். இந்தச் சவாலை வென்றெடுத்த ஒரே யொருவர் மர்ஹூம் ஏ.எச்.எம்.அலவி ஆவார்.

குருநாகல் மாவட்டத்தில் கிரிஉல்ல பிரதேசத்தில் முஸ்லிம்கள் ஓரளவு கணிசமாக வாழ்ந்து வருகின்றனர். பம்மன்ன என்ற முஸ்லிம் கிராமத்தில் 1952 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி வர்த்தகரும் சமூக சேவையாளருமான அஹமத் ஹஸன் மர்யம் வீவி தம்பதிகளின் புதல்வராக அலவி பிறந்தார். பம்மன்ன முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு வரை தமிழ் மொழியில் கற்ற இவர், பின்பு லப்பல சிங்கள மகாவித்தியாலயத்தில் இணைந்து க.பொ.த. உயர்தரம் வரை கற்றார்.

1987 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரதேசசபைத் தேர்தலில் அலவிக்கு போட்டியிடும் வாய்ப்புக் கிடைத்தது. இத்தேர்தலில் அலவி ஏகமனதாகத் தெரிவானார். 1988 ஆம் ஆண்டு மாகாணசபையின் முதலாவது தேர்தலில் வடமேல் மாகாண சபைக்கு இவர் தெரிவாகி தேசிய அரசியலில் பிரவேசித்தார். முதலாவது மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. க சார்பில் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். வடமேல் மாகாணசபைக்குத் தெரிவான முதலாவது முஸ்லிம் உறுப்பினர்களில் இவரும் ஒருவராவார்

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவர் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். குருநாகல் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராக இவர் தெரிவானார்.

2020 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகப் இவர் போட்டியிட்டார். குருநாகல் மாவட்டத்தில் சிங்கள_ முஸ்லிம் உறவைக் கட்டி எழுப்புவதில் அலவிக்கு முக்கிய பங்கு உண்டு. இனமத வேறுபாடு பாராது இவர் சேவையாற்றியதனால் சிங்கள மக்களது விருப்புக்குரியவராகத் திகழ்ந்தார்.

1990களில் இடம்பெற்ற ஜே.வி.பி கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகையிலும் உதவினார். சிங்கள_ முஸ்லிம் உறவை வளர்த்த ஓர் அரசியல்வாதி அலவியாவார். கடந்த புனித ஹஜ்ஜின் போது மக்கா சென்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றித் தாயகம் திரும்பிய ஓரிரு தினங்களில் அவர் நோய்வாய்ப்பட்டு கடந்த 12ஆம் திகதி காலமானார்.

தனது 36ஆவது வயதில் தொடங்கிய அரசியல் வாழ்க்கையை இறுதிமூச்சு வரை தொடர்ந்தார்.

# காத்தான்குடியில் போதைப்பொருளுக்கு எதிராக எழுச்சிப் பிரகடனம் செய்த பல்லாயிரம் மக்கள்!





காத்தான்குடியில் சில தினங்களுக்கு முன்னர் ஜும்ஆத் தொழுகையையடுத்து பெருந்திரளாக மக்கள் ஒன்றுதிரண்டு போதைக்கு எதிரான எழுச்சிப் பிரகடனம் செய்தனர்.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை, காத்தான்குடி வர்த்தக சங்கம் மற்றும் ஏனைய சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான எழுச்சிப் பிரகடனம் இடம்பெற்றது.

காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாயல், புதிய காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாயல் ஆகிய பள்ளிவாயல்களில் ஜும்ஆத் தொழுகையின் பின்னர் எழுச்சிப் பேரணியாக காத்தான்குடி குட்வின் சந்தி வரை சென்று அங்கு பெருந்திரளான பொதுமக்கள் ஒன்றுகூடினர்.

இதையடுத்து பொதுமக்கள் போதைக்கு எதிரான பிரகடனத்தை செய்தனர். காத்தான்குடி பள்ளிவாயல்களின் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் ரஊப் ஏ மஜீத் தலைமையில் இந்த பிரகடன நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது பிரகடனத்தை சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.சபீல் நழீம் வாசிக்க, அங்கு திரண்டிருந்த மக்கள் கைகளை நீட்டி பிரகடனம் செய்தனர்.

இந்த பிரகடன நிகழ்வில் காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஹாறூன் ரசாதி, செயலாளர் அன்சார் நழீமி, காத்தான்குடி நகர முன்னாள் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர், முன்னாள் பிரதி தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெஸீம் மற்றும் சம்மேளன பிரமுகர்கள், பள்ளிவாயல்களின் நிருவாகிகள் உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை என்பன பாரியளவில் அதிகரித்து இருக்கின்றன. இதன் விளைவாக சமூக சீர்கேடுகளும் ஒழுக்க சீர்கேடுகளும் மாணவர்களின் நடத்தைப் பிறழ்வுகளும் குடும்ப வன்முறைகளும் மற்றும் விவாகரத்துக்களும் அதிகரித்து வருகின்றன. இதனடிப்படையில் காத்தான்குடி பிரதேச மக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் கீழ்வரும் விடயங்களை சத்தியப் பிரகடனமாக மேற்கொள்கின்றோம்.

போதையினை ஏற்படுத்துகின்ற எந்தவொரு போதைப்பொருளையும் நானோ என்னை சார்ந்திருப்பவர்களோ குடும்ப உறுப்பினர்களோ வாங்கவோ, விற்கவோ, பாவிக்கவோ மாட்டேன்.

போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு நானும் எனது குடும்பமும் பகிரங்கமாக எதிர்ப்பாளர்கள் என்பதோடு, அவ்வாறு விற்பவர்களையும் பாவிப்பவர்களையும் சமூகத்தின் முன்னிலையில் அம்பலப்படுத்துவது எமது தார்மீக கடமையென சத்தியம் செய்கின்றேன்.

போதைப்பொருள் வியாபாரத்தின் மூலமும் அது சார்ந்த தரகு வேலைகள் மூலமும் ஈட்டப்படும் எந்தவொரு வருமானமும் ஹறாம் ஆகும். அதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தினை எனது குடும்பத்தினருக்கும் எனது பிள்ளைகளுக்கும் செலவிடுவதென்பதும் ஹறாம் ஆகும். போதைக்கு அடிமையானோர், போதைப் பொருட்களை விற்பவர்களை அடையாளப்படுத்த முன்வருவேன் எனவும் பிழையான அவர்களது உழைப்பில் இருந்து உண்ணுவதையும் பருகுவதையும் முற்றாக தவிர்ப்பேன் எனவும் சத்தியம் செய்கின்றேன். நமது பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை செய்பவர்கள், அதனைப் பாவிப்பவர்கள், அதற்கு ஊக்கமளிப்பவர்களின் திருமணம், மரணச் சடங்குகள் ஏனைய மகிழ்ச்சி மற்றும் துக்ககரமான நிகழ்வுகள் எதிலும் நான் கலந்து கொள்ள மாட்டேன்.

சமூகத்தில் போதைவஸ்தோடு தொடர்புடைய விற்பனையாளர்கள், உதவி ஒத்தாசை வழங்குபவர்கள் சந்தேகத்திற்கு அப்பால் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவர்களிடமிருந்து சமூகநலன் கருதி நிதி சேகரித்தல், பொது தேவைகளுக்கு அவர்களை நாடுதல், அவர்களால் வழங்கப்படும் அன்பளிப்புக்கள் மற்றும் நன்கொடைகள் எதனையும் நான் பெற்றுக் கொள்ள மாட்டேன்.

போதைப்பொருள் தொடர்பாக இலங்கையின் சட்டதிட்டங்களை முழுமையாக மதித்து பின்பற்றுவதுடன், அதனை மீறி செயற்படுபவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு தயாராகவுள்ளேன் என்பதோடு, சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகாரிகளுக்கு இது விடயமாக பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவேன்.

இவ்வாறு இந்த எழுச்சிப் பிரகடனம் செய்யப்பட்டது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்...
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# இலங்கைக்கு பெருமை ஈட்டிக் கொடுத்த அக்கரைப்பற்று பட்டயக் கணக்காளர் றொஸ்லின் அஹமட் நிஸார்



இங்கிலாந்தின் பட்டயக் கணக்காளரும், அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் நிதி முகாமைத்துவத்தில் முதுநிலை பட்டம் பெற்றுக் கொண்டவருமான அக்கரைப்பற்றைச் சேர்ந்த றொஸ்லின் அஹமட் நிஸார் 2019 ஆம் ஆண்டு தனது 20வது வயதில் PWC நிறுவனத்தில் நிதித்துறை ஆலோசகராக நியமனம் பெற்றிருந்தார்.

2021 மே மாதத்தில் இருந்து சிரேஷ்ட நிதித்துறை ஆலோசகராக அவர் தரமுயர்த்தப்பட்டார். இவரது திறமையை அடையாளம் கண்ட PWC நிறுவனம் இவரை இந்த நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவிற்கு சிபார்சு செய்தது.

அவுஸ்திரேலியா முழுவதும் PWC நிறுவனத்தில் பணிபுரிகின்ற 10,000 பேர் கொண்ட அணியில் 10 பேர் மட்டுமே இதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் றொஸ்லி அஹமட் நிஸார் தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் தனிப்பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு சிட்னி மகாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுக் கொண்டார்.

மிகவிரைவில் அவர் தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் PWC நிறுவனத்தின் முகாமையாளர்களுள் ஒருவராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. PWC நிறுவனம் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவை தலைமையகமாகக் கொண்டு 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளது. இது உலகின் முதற்தர நிதி நிறுவனங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர் அக்கரைப்பற்று அஸ் ஸிராஜ் மகாவித்தியாலய பழைய மாணவரும், அக்கரைப்பற்று நூராணியா பள்ளிவாசலில் மார்க்கக் கல்வி பயின்று திருக்குர் ஆனின் பெரும் பகுதியை மனனம் செய்தவருமாவார்.

றொஸ்லி அஹமட் நிஸார், சாய்ந்தமருதை பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்றை வதிவிடமாகவும் கொண்ட அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றும் றஸீட் ஏ நிஸார், றிஸானா தம்பதிகளின் புதல்வருமாவார். இவர் தனது தாய்நாட்டுக்கு பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ளார்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# கடும் வறட்சியால் மத்திய மாகாணத்தில் நிலவும் நீர் பிரச்சினை விரைவில் தீர்வு



கடும் வறட்சியால் மத்திய மாகாணத்தில் நிலவும் நீர் பிரச்சினை சம்பந்தமாகவும், குடிநீரை எவ்வாறு தடையின்றி வழங்குவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடலொன்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் அவரின் பங்கேற்புடன் நடைபெற்ற இக்கூட்டத்தில், கடும் வறட்சியால் கண்டி, நுவரெலியா மாவட்டங்களுக்கு குடிநீரை வழங்குவதில் உள்ள இடர்பாடுகள் பற்றி ஆராயப்பட்டது.

அத்துடன், கண்டியில் எசல பெரஹரா உற்சவம் ஆரம்பமாகியுள்ளது, ஆசிய விளையாட்டு போட்டியும் நடைபெறவுள்ளது. எனவே, கண்டி நகர் மற்றும் அதனை அண்மித்துள்ள கிராமங்கள் மற்றும் தோட்டங்களுக்கு தடையின்றி குடிநீரை வழங்குவதற்கான முகாமைத்துவ பொறிமுறை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தடையின்றி குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள், கண்டி மற்றும் நுவரெலியா மாநகரசபைகளின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவால் விரைவில் அறிக்கை கையளிக்கப்படும்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி தலைவர் சஞ்சீவ விஜயகோன், மத்திய மாகாண பிரதான செயளலார், கண்டி மாவட்ட அரசாங்க அதிபர், கண்டி மாநகர முன்னாள் மேயர், நுவரெலியா மாநகர முன்னாள் மேயர், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மத்திய மாகாண பிரதி பிரதான முகாமையாளர் மற்றும் உயர் மட்ட அதிகாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், செயலாளர்கள் என பலரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# மாத்தளை மாவட்டத்தில் பவுசர் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் வறட்சியான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன தெரிவித்தார்.

தற்போது நிலவும் வறட்சியினால் மாத்தளை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகம் தொடர்பாக விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க,மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் சமிந்த அமரவீர, நீர்ப்பாசன திட்ட அதிகாரிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிலவும் வறட்சியினால் மாத்தளை மாவட்டத்தில் 6,320 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய மாவட்ட அனர்த்த நிவாரண சேவை ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கலேவல, தம்புள்ளை ,ரத்தொட்ட,உக்குவெல,மாத்தளை உட்பட மாவட்டத்தில் பல பிரதேசங்களில் உள்ள மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்றனர். வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் 4835 குடும்பங்கள் அதிக பட்சமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




## விசேட அறிவித்தல்

இல. 77/D, ஸ்டுடியோ வீதி, மஹாபுத்கமுவ, கொட்டிகாவத்தை என்ற விலாசத்தில் வசிப்பவரும் (தேசிய அடையாள அட்டை இல. 198926702733) கொண்டவருமான **இக்பால் மொஹம்மட் ருஜாஹிம் (Iqbal Muhamed Rujahim)** என்பவர் தற்பொழுது **நெப்டியூன் பேப்பர்ஸ் பிறைவட் லிமிடட் (Neptune Papers (Pvt) Ltd)** என்ற எமது கம்பனியில் 31.07.2023ம் திகதியில் இருந்து சேவையில் இல்லை என்பதை தெரிவிப்பதோடு மேற்கூறிய திகதிக்கு பிற்பாடு மேற்கூறப்பட்ட நபருடன் செய்து கொள்ளப்படும் எந்த வியாபார நடவடிக்கைகளுக்கும் எமது மேற்கூறப்பட்ட கம்பனி பொறுப்பேற்காது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறோம்.


ரத்வத்த தோட்ட நிர்வாக சம்பவம்

## இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கண்டனம்

எல்கடுவ தோட்டத்திற்குச் சொந்தமான ரத்வத்த தோட்டத்தின் சிரேஷ்ட முகாமையாளரை தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து பேசிய பிரதான அமைச்சரின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தவேண்டுமென இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தோட்டத்தில் பணிபுரியாதவர்கள் சட்டவிரோதமாக கட்டடங்களை அமைத்ததால் தோட்ட நிர்வாகத்தினர் அதனை உடனடியாக அகற்ற வேண்டும் என்று கூறப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டது. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்த பின்னர், சட்டத்திற்கு அமைவாக காணியின் பாதுகாவலர்களாக அரச சொத்துக்களை பாதுகாக்க நிர்வாகம் தமது அதிகாரத்தை பிரயோகித்தது. ரத்வத்தை தோட்டத்தின் காணி அரசாங்கத்திற்கு சொந்தமானதுடன் இதன் நிர்வகிப்பு ஒப்பந்தம் எல்கடுவ பெருந்தோட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொழில் துறையின் உச்ச அமைப்பு என்ற வகையில், அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரின் இத்தகைய வார்த்தைப் பிரயோகம், மற்றும் அச்சுறுத்தல் போன்ற செயல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகளின் முகாமைத்துவத்தை நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக அனுமதிக்குமாறு அமைச்சரிடம் கோருகின்றோம் என பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ராகம தேவாலயத்தின் 48ஆவது வருடாந்த தேவபூஜை விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.நாட்டின் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான ஆசி வேண்டி நவக்கிரக பூஜை நடத்தப்பட்டதோடு அன்னதானமும் வழங்கப்பட்டது. படங்கள் சுதத் மரவீர




CBL சமபோஷ பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கொழும்பு குதிரைப்பந்தையத் திடல் மைதானத்தில் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது. இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த ஜுலை 30ஆம் திகதி நடைபெற்றன. இதில் ஆண்கள் பிரிவில் மருதானை சாஹிரா கல்லூரி மற்றும் கிண்ணியா மத்திய கல்லூரி ஆகியன மோதின. இதில் கிண்ணியா மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. கிண்ணியா மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தை இரண்டாவது தடவையாகவும் தனதாக்கிக் கொண்டது. பெண்கள் பிரிவில் குருநாகல் மளியதேவ பெண்கள் கல்லூரியும், அரலகன்வில விலயாக தேசிய பாடசாலையும் மோதின. இதில் மளியதேவ பெண்கள் கல்லூரி சம்பியன் பட்டத்தை வென்றது. இது மளியதேவ பெண்கள் கல்லூரி அணிக்கு ஆறாவது தடவையாகக் கிடைத்த சம்பியன் பட்டமாக அமைந்தது.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board செவ்வாய்க்கிழமை 2023.08.22 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5214 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,893,032.00 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 7 9 6 0 1 7

லக்கி 7 — திகதி 22.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0040 — வெற்றி இலக்கினம் துலாம் — L7 இலக்கம் 0 4 — வெற்றி இலக்கங்கள் 6 1 4 4 3 8 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,029,939.12

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-08-22 — சீட்டிழுப்பு இலக்கம் 523 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,914,334.80 — வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 02 26 48 62 — விசேட இலக்கினம் கடகம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1562 — 22/08/2023 — 34070 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 405,068,948.00 — ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 64 65 74 77 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3456 — சீட்டிழுப்பு திகதி 2023.08.22 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,161,830.40 — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 03 07 57 64 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 05460

தன நிதானய — தேதி 2023/08/22 — சீட்டிழுப்பு இலக்கம் 1244 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,307,023.20 — ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 20 33 38 44 — விஷேட ஆங்கில எழுத்து O — Double Chance இலக்கம் 18099


மானிப்பாயில் வழிப்பறிக் கொள்ளை

# கைதானோரில் ஒருவருக்கு விளக்கமறியல்; 4 பேர் கந்தக்காட்டுக்கு அனுப்பிவைப்பு!

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், மானிப்பாய் பிரதேசத்தில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 பேரில் ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான ஏனைய 4 பேரையும் கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்குமாறும், மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மானிப்பாயில் வீதியால் செல்லும் பொதுமக்களிடம் நேரம் மற்றும் வழி கேட்பது போன்று பாசாங்கு செய்து, வழிப்பறியில் இவர்கள் ஈடுபட்டதுடன், 5 சைக்கிள்களை திருடியதாக பொலிஸாரிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், சாவற்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது முதல் 21 வயதுக்குட்பட்ட 5 பேரை கடந்த திங்கட்கிழமை (21) கைது செய்தனர்.

இவர்களிடம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்ட போது, திருடப்பட்ட 5 சைக்கிள்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, இவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் முற்படுத்தி மருத்துவ சோதனைக்கு உட்படுத்திய போது, இவர்களில் 4 பேர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானமை தெரியவந்தது.


சுற்றாடல் அமைச்சு

## NAP செயற்படுத்தலுக்காக சிவில் சமூக அமைப்பு அமர்வின் ஸ்தாபிப்பு

காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களால் அதிகளவு பாதிக்கப்படக்கூடிய நிலையில் இலங்கை காணப்படுகின்றது. சகல நிலைகளிலும் திட்டமிடும் போது. காலநிலை மாற்றத்துக்கேற்ப பின்பற்றிச் செயற்படுவது என்பது அத்தியாவசியமான செயன்முறையாக அமைந்துள்ளது. தேசிய பின்பற்றல் திட்டமிடல் செயன்முறை (NAP), 2010 ஆம் ஆண்டில் Cancun பின்பற்றல் கட்டமைப்பின் கீழ் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டதுடன். UNFCCC இன் தரப்பினரின் 16ஆவது மாநாட்டின் வெளிப்பாடாக இது அமைந்திருந்தது. பின்பற்றல் தேவைகளை இனங்காண்பதற்கான பிரதான கருவியாக NAP அமைந்திருப்பதுடன். இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான மூலோபாயங்களையும் நிகழ்ச்சிகளையும் வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவானதாகவும் அமைந்துள்ளது. GCF நிதியளிப்பில் முன்னெடுக்கப்படும் NAP தயார்நிலை ஆதரவுச் செயற்திட்டத்தின் கீழ். NAP 2016-2025 மீளமைக்கும் செயன்முறை. சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்ற செயலகத்தினால். அதன் செயற்படுத்தல் பங்காளரான Global Green Growth Institute (GGGI) ஊடாக தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. மேலும். ஒன்பது மாகாணங்களுக்குமான மாகாண பின்பற்றல் திட்டங்களும் (PAPs)இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட வண்ணமுள்ளன.

களநிலை செயற்பாடுகளைக் கொண்டுள்ள காலநிலை செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சிவில் சமூக அமைப்புகளை (CSOs) கொண்ட NAP ஒழுங்குபடுத்தல் பொறிமுறை / அமர்வை நிறுவுவதற்கான தேவையை NAP 2016-2025 ஏற்றுக் கொண்டுள்ளது. பிரிவு காலநிலை கட்டங்கள் (SCC) மற்றும் தேசிய செயற்பாட்டுக்க குழு மற்றும் அவற்றுக்கு சமாந்தரமாக நிறுவப்படவுள்ள மாகாண காலநிலை நிறுவகங்களுக்கான ஆதரவளிக்கும் அமைப்பாக இது செயலாற்றும்.

முதலாவது CSO அமர்வு 2023 செப்டெம்பர் 04ஆம் திகதி மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரை. சொபாதம் பியச. இல. 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை. பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நீங்களும் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதில் பின்வரும். (1) உணவு பாதுகாப்பு. விவசாயம். கால்நடை மற்றும் மீன்பிடி. (2) நீர் வளங்கள். (3) கரையோரம் மற்றும் கடற்றொழில். (4) சுகாதாரம். (5) மனித குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்புகள். (6) சூழல் கட்டமைப்புகள் மற்றும் உயிரியல் பரம்பல். (7) சுற்றுலா பொழுதுபோக்கு. (8) ஏற்றுமதி விவசாயம் (9) வலு. தொழிற்துறை மற்றும் போக்குவரத்து (10) கொள்கைக் கற்கைகள். பாலின சமூக உள்ளடக்கம். ஆய்வு. தொழில்நுட்ப மாற்றம். திறன் கட்டியெழுப்பல். கல்வி. காலநிலை தகவல்கள் போன்ற செயலாற்றும் பிரிவுகளில் ஈடுபட்டுள்ள சிவில் சமூக அமைப்பெனில் (CSO), இலங்கையில் காலநிலை செயற்பாட்டு இலக்குகளை எய்துவது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆரம்ப CSO அமர்வில் இணைந்து கொண்டு. அசல் மாற்றத்தை முன்னெடுக்க உதவுமாறு உங்களை அழைக்கின்றோம்.

**எதை எதிர்பார்க்கலாம்**

அதிகரித்துச் செல்லும் காலநிலை மாற்ற சவால்களை தடுக்கக்கூடிய வகையிலான கலந்துரையாடல்கள். கொள்கை கலந்துரையாடல்கள் மற்றும் இணைந்த செயற்பாடுகளின் ஈடுபடல். கொள்கை வடிவமைப்பு முதல் களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வரை. உங்களின் குரல் முக்கியத்துவம் வாய்ந்தது.

**நிகழ்ச்சியின் தகவல்கள்**

- திகதி : செப்டெம்பர் 04. 2023
- நேரம் : மு.ப. 9:30 – பி.ப. 12:30
- இடம் : கேட்போர்கூடம். 8ஆம் மாடி. சுற்றாடல் அமைச்சு
- முகவரி : சொபாதம் பியச. 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை. பத்தரமுல்ல
- குறிப்பு : மட்டுப்படுத்தப்பட்ட கொள்ளளவு வசதிகள் நிலவுகின்றமையால். பதிவு செய்து கொள்வோரில் முதல் 100 பேருக்கு மாத்திரம் CSO அமர்வில் நேரடியாக பங்கேற்பதற்கான அழைப்பிதழ் அனுப்பப்படும்.

**ஏன் பங்குபற்ற வேண்டும்?**

- காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளின் பொறுப்புகள் மற்றும் நிலைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு
- இலகுவில் பாதிப்புறக்கூடிய துறைகள் மற்றும் குறுக்குவெட்டு தொனிப்பொருட்களில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு
- காலநிலை மாற்றக் கொள்கைகளை வடிவமைப்பதற்கான மூலோபாயத்தை அமைப்பது
- காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் சக CSOகளுடன் வலையமைப்பை பேணுவதற்கு
- தேசிய மற்றும் உபதேசிய காலநிலை மாற்ற செயற்பாடுகள் தொடர்பில் இணைந்து செயலாற்றுவதற்கு CSOகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு

**எவ்வாறு பதிவு செய்து கொள்வது:**

ஒன்லைனில் பதிவு செய்து உங்களின் பங்கேற்பை உறுதி செய்யவும்: https://forms.gle/NsrckX1dojCnmEpcA

*உங்கள் CSO'களின் அர்ப்பணிப்பினூடாக மாற்றியமைக்கத்தக்க பெறுபேறுகளை எய்தக்கூடியதாக இருக்கும். முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புடன் இணையுங்கள். மாற்றத்தின் காரணியாக இருங்கள். மீண்டெழும், காலநிலை மாற்றத்துக்கு தயாரான எதிர்காலத்தை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்!*

**மேலதிக தகவல்களுக்கு, எம்முடன் தொடர்பு கொள்ளவும்:**

மின்னஞ்சல்: udari.samarakoon@redcross.lk | தொலைபேசி: +9470 3788725 | இணையத்தளம்: www.climatechange.lk

செயலாளர்,
சுற்றாடல் அமைச்சு




யாழ்ப்பாணம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினுடைய வருடாந்த மகோற்சவத் திருவிழாவின் இரதோற்சவத் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்றது. சண்டேஸ்வரியுடன் உள் வீதியினூடாக வலம் வந்த துர்க்காதேவி தங்க ரதத்தில் ஏறி, வெளி வீதியினூடாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதன் பின்னர், நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் கொடித்தம்ப பூஜையும் 5.00 மணியளவில் வசந்தமண்டப பூஜையும் நடைபெற்றது. (கரவெட்டி தினகரன் நிருபர்)

# பாடகர் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில்!

புகழ்பெற்ற தென்னிந்திய இசை நட்சத்திரக் கலைஞரான சந்தோஷ் நாராயணனின் மாபெரும் இசை நிகழ்ச்சியொன்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி மாலை 6.00 மணி முதல் யாழ்ப்பாணம், முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரசிகர்களை இசைப் பரவசத்தில் ஆழ்த்தவுள்ள இந்த இசை நிகழ்ச்சிக்கான அனுசரணையை Lyca குழுமத்தின் தவிசாளர் அல்லிராஜா சுபாஸ்கரன் வழங்கவுள்ளதுடன், தென்னிந்திய மற்றும் உள்நாட்டுக் கலைஞர்கள் பலர் கலந்துகொண்டு இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர்.

இந்த இசை நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் வாய்ப்பு அனைவருக்கும் இலவசமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த இசை நிகழ்ச்சி தொடர்பாக கருத்துத் தெரிவித்த சுபாஸ்கரன், "இசையினூடாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலாசார உறவுகளை கொண்டாடும் வகையில் இந்த இசை நிகழ்ச்சி அமைந்திருக்கும். இலங்கை மற்றும் இந்திய கலைஞர்களை ஒன்றிணைத்து, மனம் மறவாத இனிமையான மாலைப்பொழுதை இலங்கை ரசிகர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பது தமது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது" எனத் தெரிவித்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டு சந்தோஷ் நாராயணன் சுயாதீன இசையமைப்பாளராக அறிமுகமாகிய பின்னர் அவரின் படைப்புகளுக்கு பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன.

# முல்லைத்தீவில் நன்னீர் மீன் புகைக்கருவாடு உற்பத்தி நிலையம்

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அம்பலப்பெருமாள்குளம் பிரதேசத்தில் நன்னீர் கிராமிய மீனவர் அமைப்பு கட்டடம் மற்றும் நன்னீர் மீன் புகைக்கருவாடு உற்பத்தி நிலையத்தை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) திறந்து வைத்துள்ளார்.

நன்னீர் மீன்கள் அதிகமாக பிடிபடும் குளங்களில் ஒன்றாகிய அம்பலப்பெருமாள் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் நன்மை கருதி இந்த நிலையமானது, உலக உணவுத் திட்டத்தின் நிதி அனுசரணையுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அம்பலப்பெருமாள் குளத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்களை சந்தைப்படுத்த முடியாத நிலைமையும் மிகக் குறைந்த விலையில் மீன்களை விற்பனை செய்ய வேண்டிய நிலைமையும் காணப்படுவதால், இந்த புகைக் கருவாடு உற்பத்தி நிலையத்தினால், நன்னீர் மீனவர்கள் நன்மையடைய வாய்ப்புக் கிட்டியுள்ளது. இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் ஜெயபவாணி, துணுக்காய் பிரதேச செயலாளர் லதுமீரா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# கிழக்கின் குரல்



# வீதி விபத்துகளால் தினமும் எட்டு பேர் பலி; 300 பேர் காயம்

## மட்டு. மாவட்ட சுகாதார பணிப்பாளர் ஜி.சுகுணன்

மட்டக்களப்பு குறூப் நிருபர்



நாடளாவிய ரீதியில் தினமும் அறுபது விபத்துக்கள் இடம்பெறுகின்றன. ஒரு விபத்தில் ஐந்து பேர் வீதம் 300 பேர் தினமும் காயமடைந்து, இவர்களில் எட்டு பேர் தினமும் பலியாகின்றனர். காயமடைபவர்களுக்கு அதிகமான இரத்தம் தேவைப்படுகிறது, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாதாந்தம் ஆயிரம் பைந்த் இரத்தம் தேவைப்படுகிறது.

ஆனால் குறைந்த அளவு இரத்தமே இரத்த தானமாக கிடைக்கிறது. எனவே தினமும் ஒவ்வொருவரும் இரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி. சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சலாமா பவுண்டேஷன், ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் புதன்கிழமை (23) மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜூம்ஆ பள்ளிவாசலில் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

சலாமா பவுண்டேஷன் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் எஸ். நவேஷ்வரன், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் எம். செல்வராசா உட்பட சமய தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் முஸ்லிம் அமைப்புகளும் தனி நபர்களும் வருடாந்தம் அதிகமாக இரத்த தானம் செய்வதில் முன் நிற்கிறார்கள்.

அதேபோன்று அனைவரும் இதத் தானம் செய்ய முன்வர வேண்டும் என்றார்.

# செங்கலடியில் மாபெரும் இரத்ததான முகாம்

ஏறாவூர் சுழற்சி நிருபர்



மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையிலும் அதனை அண்டியுள்ள வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளிகளுக்கு தேவையான, இரத்தத்தினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாமொன்று புதன்கிழமை (23) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில நடைபெற்றது.

ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரதேச செயலாளர் கே. தனபால சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிருவாக உத்தியோகத்தர் மற்றும் செயலக உத்தியோகத்தாகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலான குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு குருதி வழங்கியதோடு, கொடையாளர்கள் அனைவருக்கும் பிரதேச செயலகத்தினால் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# திருக்கோணேஸ்வரத்திலிருந்து புனித வேலுடன் வெருகலம்பதிக்கு நடை பஜனை

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு 21 வது முறையாக இவ் வருடமும் அருள் மிகு திருக்கோணேஸ்வரத்திலிருந்து கதிர்காமம் எடுத்துச் செல்லப்பட்ட புனித வேலுடன் வெருகலம்பதிக்கு நடை பஜனையை மேற்கொள்ள திருகோணமலை மாவட்ட வேல்நடை பஜனைக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை (30) காலை 7.00 மணிக்கு அன்புவழிபுரம் அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்தில் புனிதவேலுக்கு அபிஷேகம், பூஜை நடைபெற்று அன்புவழிபுரம் அருள்மிகு தில்லையம்பல பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் விஷேட பூஜையை தொடர்ந்து, திருக்கோணேஸ்வரத்துக்கு புனித வேல் எடுத்துவரப்படும்.

அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு கோணேஸ்வரர் ஆலயத்தில் இருந்து வேல்நடைபஜனை ஆரம்பமாகி தொடர்ந்து திருகோணமலை ஊடாக பல ஆலயங்களை தரிசித்து, மூதூர் ஊடாக பல ஆலயங்களை தரிசித்து 05/09/2023 செவ்வாய்க்கிழமை மாலை வேல்நடை பஜனைக்குழு வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தை சென்றடையும். 06/09/2023 புதன்கிழமை வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமியின் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

# திருமலையில் வெப்பநிலை அதிகரிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை, தோப்பூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக வெப்பநிலை நாளாந்தம் அதிகரித்து வருவதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

சராசரியாக 35 பாகை செல்சியஸிற்கும் அதிகளவில் வெப்பநிலை பதிவாகுவதனால் அதிகரித்த வெப்பநிலையால் வியர்வையினால் சிரமப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த வெப்பநிலையால் நாளாந்த வேலைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் வீட்டிலேயே இருக்கவேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வெப்பநிலை அதிகரிப்பால் சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் வெளியில் நடமாடுவதை தவிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் மகோற்சவம், கொடியேற்ற நிகழ்வு



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் திங்கட்கிழமை (21) ஆரம்பமானது.

ஞாயிற்றுக்கிழமை வாஸ்து சாந்தி கிரியை நிகழ்வுகள் இடம்பெற்று, திங்கட்கிழமை சுப முகூர்த்த வேளையில் வேதபாரயாணங்கள் ஓதி, மேள தாள வாத்தியங்கள் முழங்க, பக்தர்களின் அரோகரா கோஷங்களுக்கு மத்தியில் ஆலய பிரதமகுரு சிவத்திரு நவரெத்தின முரசொலிமாறன் குருக்கள் தலைமையிலான குழுவினரால் கொடியேற்றம் இடம்பெற்றது.

ஆலய திருவிழாக்கள் தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெற்று, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜைகள் மற்றும் சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வரும் நிகழ்வுகள் இடம்பெற்று, எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டை திருவிழாவும், 29 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 30 ஆம் திகதி சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவரை மொறவெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.


தொலைபேசி ஊடாக ஈசிகேஸ் மூலம் பணத்தை செலுத்திய பின்னர், சந்தேக நபர் இளைஞர்களுக்கு போதை பொருளை விற்பனை செய்து வருவதாக செவ்வாய்க்கிழமை (22) பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேக நபரை சோதனை இட்டபோது நான்கு ஹெரோயின் பக்கெட்டுகளை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் திருகோணமலை வில்கம் விகார,பன்சல வீதியைச் சேர்ந்த விக்ரமகே ஜகத் ரோஹன (45 வயது) என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸார் விசாரணை செய்து வருவதுடன், திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# ஒலுவில் அஷ்ரப் நகரில் காட்டு யானைகளால் தொல்லை

ஒலுவில் விசேட நிருபர்



ஒலுவில் அஷ்ரப் நகர் மீள் குடியேற்றக் கிராமத்தில் அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு வரும் யானைக் கூட்டம் இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகுந்து வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இக் கிராமத்தில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் எல்லைக் கிராமங்களான சம்புநகர், ஹிறாநகர், ஆலிம் நகர் ஆகிய பிந்தங்கிய பிரதேசங்களிலும் யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு எல்லைக் கிராமங்களில் மின்சார வேலிகளை நிர்மாணித்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சர்வமத தலைவர்கள் பௌத்த மதகுருவினரால் சுற்றிவளைப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு மயிலத்தமடு, மாதவனைப் பகுதிக்கு செவ்வாய்கிழமை (22) சென்ற சர்வமத தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அங்கிருந்த பௌத்த மதகுரு தலைமையிலான காணி அபகரிப்பு குழு, சுற்றி வளைத்து அங்கிருந்து வெளியேற முடியாதவாறு வைத்துள்ளதாக அவர்களிடம் அகப்பட்டுள்ள ஊடகவியலாளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் தெரிவிக்கின்றனர்.

பண்ணையாளர்கள் தங்களது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை பார்வையிட்டு அவற்றை கேட்டறிவதற்காகவே இவர்களின் களவிஜயம் அமைந்திருந்தது.

இக்குழு பண்ணையாளர்களுடன் கலந்துரையாடலினை முன்னெடுத்ததன் பின்னர், பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து மீண்டும் திரும்பி செல்லும்போது, அப்பகுதியில் சட்டவிரோதமாக காணிகளை பிடிப்பவர்கள் மற்றும் பௌத்த மதகுரு ஒருவரும் இணைந்து அவர்களை வழி மறித்து சிறைபிடித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உயிர்காப்பு பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



அம்பாறை சர்வோதய அமைப்பினால் சமூக உயிர் காப்பு பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் திங்கட்கிழமை (21) அம்பாறையில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இப் பயிற்சியை நிறைவு செய்த சுமார் 150 பேருக்கு சான்றிதழ்கள் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட விசேட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் எந்த பகுதியிலும் அவசர அனர்த்த நிலைமைகள் ஏற்படுமாயின், அனர்த்த நிலைமைகளிலிருந்து பொது மக்களை பாதுகாப்பதற்கும், அதனை சமாளிப்பதற்கும் இப்பயிற்சி நெறியினை நிறைவு செய்த பயிற்சியாளர்கள் தங்களுடைய பயிற்சி அனுபவத்தின் மூலம் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தான் எதிர்பார்ப்பதாக மாவட்ட செயலாளர் இதன் போது தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பிரதி பிரதம சங்கநாயக சபை மகா விகாரையின் விஹாராதிபதி சுஹதகம சீலரத்ன தேரர், அம்பாறை உதவி பிரதேச செயலாளர் திருமதி. சமாதி அகலகொடுவ, அம்பாறை மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்தவர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# விசேட கல்விப் பிரிவு திறந்து வைப்பு



தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் வலயத்திற்குட்பட்ட சண்பகா மகா வித்தியாலயத்தில் அதிபர் சச்சிதானந்தம் தலைமையில், தனியான விசேட கல்விப்பிரிவு செவ்வாய்க்கிழமை (22) திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வெருகல் பிரதேச செயலாளர் கலந்து கொண்டு திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் வெருகல் பிரதேச செயலாளர், வெருகல் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர், மூதூர் விசேட கல்வி பிரிவின் ஆசிரியர் ஆலோசகர், திருகோணமலை மாவட்ட சமூக சேவை ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிரதேச சமூக சேவை மேம்பாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பாடசாலைக்கு அறிவித்தல் பலகை அன்பளிப்பு



மாளிகைக்காடு குறூப், பாலமுனை தினகரன் நிருபர்கள்

நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலையின் பெண்கள் பிரிவினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை கருத்தில் கொண்டு, "றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்" இன் நிதி பங்களிப்பில் அமைப்பின் தலைவர் றிஸ்லி முஸ்தபாவினால் புதிய அறிவித்தல் பலகை ஒன்று செவ்வாய்க்கிழமை ( 22) அன்பளிப்பு செய்யப்பட்டது.

பாடசாலையின் அதிபர் ஏ.ஏ.அப்துல் கபூரிடம் உத்தியோகபூர்வமாக இது வழங்கி வைக்கப்பட்டது.

# ஓ.ஸி.டி. அமைப்பினால் வீடு கையளிப்பு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

"2030 ஆம் ஆண்டில் யாவருக்கும் உறையுள்" எனும் தொனிப் பொருளில் சம்மாந்துறை ஓ.ஸி.டி. அமைப்பின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட பத்தாவது வீட்டினை கையளிக்கும் நிகழ்வு, அதன் செயலாளர் முஹம்மட் சரோஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் வீடு சம்மாந்துறை ஜபல் பள்ளிவாசல் மஹல்லாவை சேர்ந்த குடும்பமொன்றிற்கு வழங்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சமூக சேவையாளர் விஞ்ஞான முதுமாணி ஓ.ஸி.டி. அமைப்பின் தலைவர் அஸ்மி யாசின் கலந்து சிறப்பித்ததோடு, ஓ.ஸி.டி. அமைப்பின் ஆலோசகர்கள் அதன் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் விவாக, விவாகரத்து நூல் வெளியீட்டு நிகழ்வு

திராய்க்கேணி தினகரன் நிருபர்

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் குடியியல் விவகாரங்களை நெறிப்படுத்தும் தனியார் சட்டமாகிய முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சமகாலத்தில் முன்வைக்கப்பட்டு வருகின்ற வேளை, முஸ்லிம் விவாக விவாகரத்து சட்ட திருத்தத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை இஸ்லாமிய நோக்குடன் தெளிவுபடுத்தும் விதமாக கலாநிதி றவூப் ஸெய்ன் எழுதிய "முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் ஓர் இஸ்லாமிய நோக்கு" எனும் நூல் வெளியீடு அண்மையில் அக்கரைப்பற்று ஹல்லாஜ் வள நிலையத்தில் அனிஷா பிர்தவ்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நூல் வெளியீட்டினை I WARE நிறுவனமானது a HEO நிறுவனத்துடன் இணைந்து நடத்தியது.

இந்நிகழ்வில் கல்முனை மாவட்ட நீதிபதி எம்.எஸ். சம்சுதீன் மற்றும் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் பல அதிதிகளுக்கும் இந்நூல் உத்தியோகபூர்வமாக வழங்கிவைக்கப்பட்டன.

NSB

# தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக் கோரல் (தேசிய போட்டி கேள்வி கோரல் - NCB)

**பெறுகை அறிவித்தல் இலக்கம் - என்.எஸ்.பீ/பீ.டி/2023/12**

இங்கு குறிப்பிடப்படும் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட வழங்கல்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகளிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| வேலை விபரம் | 100,000 Nos. of Plastic Tills for National Savings Bank |
| பெறுகை முறை | National Competitive Bidding (NCB) |
| மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | Rs. 2,000.00 |
| கேள்விப் பிணையின் பெறுமதி | Rs. 45,000.00 |
| கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் முடிவடையும் திகதி மற்றும் நேரம் | 13.09.2023 பி.ப. 3.00 மணிக்கு |
| கேள்விகள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் | 14.09.2023 மு.ப. 10.00 மணிக்கு |

1. 2023.08.24 முதல் 2023.09.13 வரை வேலை நாட்களில் முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 3.00 வரை குறித்த கேள்விப் பத்திரங்களை, கொழும்பு-03, காலி வீதி. இல. 255 இல் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் வழங்கல் முகாமையாளரிடம் எழுத்து மூல வேண்டுதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
2. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் முதல் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கிப் பிணையொன்றை/ கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. குறித்த தினத்தில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல் முற்பகல் 10.00 இற்கு முடிவடைந்தவுடன் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன முற்பகல் 10.00 இற்கு பின்னர் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. சகல கேள்விகளையும் அல்லது ஒரு கேள்வியை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது காரணம் கூறாமலேயே, நிராகரிக்கும் உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டிருக்கும்.

**தலைவர்,**
**நிறுவன பெறுகைக் குழு - சிறிய அளவிலான,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03**

---

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAZ-7564 BAJAJ 2014, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 052808

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## சீதாவக்கபுர நகர சபை

**அழிவடையக்கூடிய பொருட்களை விற்பனை செய்வதற்கான பெறுகை அறிவித்தல்**

2023.10.01 முதல் 2024.12.31 வரை சீதாவக்கபுர நகர சபையினால் சேகரிக்கப்படும் அழிவடையக்கூடிய பொருட்களை (விலங்குணவு) விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் என்னால் கோரப்படும்.

- விலைமனு மாதிரிப் பத்திரங்கள் விநியோகித்தல் - 2023.09.19 மு.ப. 9.30 வரை
- விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் - 2023.09.19 மு.ப. 10.00 வரை
- விலைமனுக்கல் திறத்தல் - 2023.09.19 மு.ப. 10.30 இற்கு (சீதாவக்கபுர நகர சபை அலுவலகத்தில்)
- அழிவடையக்கூடிய பொருட்கள் 1 கிலோவிற்கான குறைந்தபட்ச விலை ரூ. 12.00 ஆகும்.

கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும் மீளளிக்கப்படும் பெறுகை வைப்புத் தொகை ரூ. 25000.00 ஐ இவ் அலுவலகத்திற்கு காசு செலுத்தி பெற்றுக்கொள்ளும் மாதிரிப் பத்திரத்தின் மூலம் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். தொடர்புகள் 036-2222285

**கே.ஏ. சந்தனபத்மசிரி**
**சீதாவக்கபுர நகர சபையின் செயலாளர் மற்றும் சீதாவக்கபுர நகர சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி (பதில்)**
**சீதாவக்கபுர நகர சபை, அவிசாவளை.**

---

Repeat Your ad For Better Offers

---

# மாவட்ட பொது வைத்தியசாலை - மொனராகலை

## மருத்துவ ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

01. மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகை குழுவின் தலைவரால் கீழ்க்காணும் மருத்துவ ஆய்வுகூட உபகரணங்களை வழங்குவதற்காக 2023.09.14 வரையான காலத்திற்குள் பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| இலக்கம் | உபகரணம் | வழங்க வேண்டிய அளவு | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | Vacuum Infiltrated Tissue Processor | 01 | 5,000.00 |

கேள்விதாரர் சார்பாக தகைமை கொண்ட முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவரால் கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளப்படும் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியின் மூலம் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

i. மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை மருத்துவ அதிகாரிக்கு எழுத்து மூல வேண்டுதல்.
ii. மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை, கணக்காளரிடம் செலுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் சார்பாக விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டு.
iii. வியாபார பதிவுச் சான்றிதழின் போட்டோப் பிரதியொன்று

02. இவ் வைத்தியசாலையில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் படிவத்தின் மூலம் மாத்திரம் கேள்வி வேண்டுதலை சமர்ப்பித்தல் வேண்டும். வேறுவிதமாக மாதிரிப் பத்திரங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
03. வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிலிருந்து கேள்விப்பத்திரக் கட்டணங்களை கொடுப்பனவுகள் இன்றி பரீட்சித்துப்பார்க்கலாம்.
04. 2023.09.13 வரையான காலத்திற்குள் வாரத்தின் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023.09.14 பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன். பி.ப. 2.15இற்கு மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் கூட்டமண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்விகள் அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.
06. ஏதேனும் கேள்வியொன்றை அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவின் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
07. சகல கேள்விகளும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரத்திற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி சமர்ப்பிக்கப்படும் உருப்படியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட மாட்டாது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மொனராகலை.**

**தொடர்புகள்:-**
**கணக்காளர்**
**055-2276261/ 0552276912**

---

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/ PT/6494(EL) | Spares for Public Address System of ZPMC Cranes | 40,000.00 | 1,000.00 | 2023.09.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6502(MP) | 04 Sets (16 Nos. Components) Short Rails for ZPMC 41T STS Cranes at JCT | 28,000.00 | 1,000.00 | 2023.09.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/015 | 01 No. Industrial Type Washing Plant | 50,000.00 | 1,000.00 | 2023.09.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/07/032 | Upgrading of CCTV Systems | 100,000.00 | 3,500.00 | 2023.09.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/060 | Spare Parts for the Terberg Yard Tractors | 35,000.00 | 1,000.00 | 2023.09.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/14/056 | Dissolved Acetylene Gas for Year 2023-2024 | 275,000.00 | 3,500.00 | 2023.09.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/04/054 | Trouser Blue Drill (Track Bottom)-7500 Nos.-2022 | 65.000.00 | 1,000.00 | 2023.09.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/22/ PT/03/051 | Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT – 06 Nos. | 50,000.00 | 1,000.00 | 2023.09.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ-03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழஙகப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஓகஸ்ட் 25 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள் : 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -

**கமத்தொழில் அமைச்சு - IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**Supply, delivery, installation & commissioning of Irrigation Systems, Espalier Systems and supply & delivery of Fruit Covering Bags (color) for Banana and Mango Clusters in Anuradhapura & Jaffna Districts**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஜடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நீர்ப்பாசன முறைமைகள், எஸ்பாலியர் முறைமைகள் ஆகியவற்றின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காகவும் வாழைப்பழம் மற்றும் மாம்பழ கொத்தணிகளில் பழங்களை மூடும் பைகளை (நிறம்) வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காகவும் செலவிட உத்தேசித்துள்ளது.
2. அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நீர்ப்பாசன முறைமைகள், எஸ்பாலியர் முறைமைகள் ஆகியவற்றின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காகவும் வாழைப்பழம் மற்றும் மாம்பழ கொத்தணிகளில் பழங்களை மூடும் பைகளை (நிறம்) வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காகவும் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| 100 Nos. of Low-Pressure Mini Sprinkler Irrigation Systems with drip systems for Mango/chili cluster in Jaffna District | LK-MOA-PMU-353128-GO-RFB | 600,000.00 | 10,000.00 |
| 200 Nos. micro sprinkler irrigation systems for Banana farmers in Rajanganaya DS Division in Anuradhapura | LK-MOA-PMU-348587-GO-RFB | 1,200,000.00 | 15,000.00 |
| யாழ் மாவட்டத்தில் மாம்பழ/ மிளகாய் கொத்தணிகளுக்கு பழங்களை மூடும் 2,000,000 எண்ணிக்கையுள்ள பைகளை வழங்கல் | LK-MOA-PMU-353146-GO-RFB | 460,000.00 | 7,500.00 |
| யாழ் மாவட்டத்தில் மாம்பழ/ மிளகாய் கொத்தணிகளுக்கு 50 எண்ணிக்கையுள்ள ஸ்பாலியர் முறைமைகள் | LK-MOA-PMU-353137-GO-RFB | 600,000.00 | 10,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **2023.08.24 ஆம் திகதியிலிருந்து 2023.09.13 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. **2023.09.13 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **2023.09.13 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ‘மூலப்பிரதி மற்றும் ‘நகல்பிரதியென’ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **“Supply, delivery, installing & commissioning of Irrigation systems, Espalier systems and supply & delivery of Fruit Covering Bags (Color) for Banana and Mango Clusters in Anuradhapura & Jaffna Districts” என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.**
8. மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
**திகதி: 24.08.2023.**

---

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified

Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted

For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# கலேவெல பிரதேச சபை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2024

2024ஆம் வருடத்தில் கலேவெல பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவர்.

| தொ. இல. | பொருட்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | அனைத்து வகையான காகிதாதிகள் மற்றும் ஆவணங்கள் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 2. | நூலக புத்தகங்களை கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 3. | அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 4. | தொலைநகல் இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 5. | கைவிரல் அடையாள இயந்திரங்களை கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 6. | டோனர், நகல் பிரதிகள், தீந்தை கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 7. | கணனி இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 8. | மின் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 9. | வீதி விளக்கு பராமரிப்புக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 10. | அனைத்து வகையான வாகன உதிரிப்பாகங்களைக் (டயர்கள், டியூப்கள் மற்றும் பட்டறிகள்) கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 11. | வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் வீதி நிர்மாணப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 12. | சகல வகையான தார் வகைகளை கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 13. | மிதிவண்டி அனுமதிப்பத்திரங்களைக் (தகடு) கொள்வனவு செய்தல் | ரூபா 500.00 |
| 14. | அனைத்து வகையான கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 15. | அனைத்து வகையான கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 16. | நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 17. | அச்சுப் பொறிகள் மற்றும் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,500.00 |
| 18. | பெயர்ப் பலகைகள், விளம்பரப் பிரசாரங்கள், பதாகைகள் வரைதல் மற்றும் தயாரித்தல் | ரூபா 1,000.00 |
| 19. | உபசாரங்களுக்குத் தேவையான உணவு பானங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 20. | உபசாரங்கள் சார்ந்த ஏனைய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 21. | போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் | ரூபா 1,000.00 |
| 22. | மரம் சார்ந்த உற்பத்திகள் | ரூபா 1,000.00 |
| 23. | துப்புரவேற்பாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 24. | பாவனைப் பொருட்கள் கொள்வனவு செய்தல் (சோப், விளக்குமாறு, தும்புத்தடி போன்றன) | ரூபா 1,000.00 |
| 25. | சுகாதாரப் பொருட்கள் (சேற்று உறை, கையுறை, பூட்ஸ் போன்றன) கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 26 | ஆயுர்வேத உலர் ஔடதங்கள் மற்றும் பச்சை ஔடதங்களை கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 27 | தீயணைப்பு உபகரங்களை கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 28 | கழிக்கப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 29 | சிறுவர் பூங்காவுக்கான விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் | ரூபா 1,500.00 |
| 30 | திரைச் சீலைகள், துணிக் கொடிகள், மழை அங்கிகளைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 31 | ஒலிபெருக்கி உபகரணங்கள், உற்சவப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 32 | விவசாய இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 33 | கன்றுகளை கொள்வனவு செய்தல் | ரூபா 1,000.00 |
| | **சேவைகள் வழங்குதல்** | **பதிவுக் கட்டணம்** |
| 1. | அச்சு வேலைகள் மற்றும் திகதி முத்திரைகள் தயாரித்தல் | ரூபா 1,000.00 |
| 2. | உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல் | ரூபா 1,000.00 |
| 3. | அலுவலக உபகரணங்களின் மற்றும் இயந்திராதிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 1,000.00 |
| 4. | கணனி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், ஸ்கேனர் இயந்திரம் போன்றன பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 1,000.00 |
| 5. | இணைதளம் ஆக்கம், தகவல் அமைப்புகள் ஆச்சுப் மற்றும் காணி மென்பொருள் வழங்கல் (Software) | ரூபா 1,000.00 |
| 6. | வாகன இயந்திராதிகளைப் பழுதுபார்த்தல் | ரூபா 1,500.00 |
| 7. | வாகனம் சேர்விஸ் செய்தல் | ரூபா 1,500.00 |
| 8. | மோட்டார் வாகன குசன் வேலைகள் மற்றும் ஹுட் வேலைகள் | ரூபா 1,000.00 |
| 9. | நில அளவையாளர்களைப் பதிவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 10. | சட்டத்தரணிகளைப் பதிவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 11. | திட்ட வரைபட வரைஞர்களைப் பதிவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 12. | மொழிபெயர்ப்புச் சேவை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 13. | ஒலிபெருக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் | ரூபா 1,000.00 |
| 14. | போட்டோ எடுத்தல் மற்றும் வீடியோபடமெடுத்தல் | ரூபா 1,000.00 |
| 15. | மேசன் வேலை, மர வேலை, நீர்க்குழாய், வெல்டிங் வேலை | ரூபா 1,500.00 |
| 16. | செயற்றிட்ட தயாரிப்பாளர்கள் | ரூபா 1,000.00 |
| 17. | தீயணைப்பு உபகரணங்களை பொருத்துதல் மற்றும் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 1,000.00 |
| 18. | உபசரணை சேவை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 19. | அபாயகரமான மரங்களை வெட்டுதல் மற்றும் கட்டுதல் | ரூபா 1,000.00 |
| 20. | கட்டாக்காலி மாடுகளைப் பிடித்தல் | ரூபா 1,000.00 |
| 21. | வாகன வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் | ரூபா 1,000.00 |
| 22. | கட்டிட வளிச்சீராக்கத் திருத்தவேலைகள் | ரூபா 1,000.00 |
| 23. | கட்டிட மின் முறைமைகளின் திருத்தவேலைகள் | ரூபா 1,000.00 |
| 19. | நகர வடிவமைப்பாளர்கள் | ரூபா 1,000.00 |
| 20. | வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு | ரூபா 1,000.00 |
| 21. | CCTV கெமரா அமைப்பை பொருத்துதல் | ரூபா 1,500.00 |
| 22. | சரளைக் கற்கள் வழங்குதல் | ரூபா 1,500.00 |
| 23. | பட்டய பொறியியல் (சிவில்/மின்) | ரூபா 1,500.00 |
| 24. | கட்டிட பழுதுபார்த்தல்கள் | ரூபா 1,500.00 |
| 25. | நகர வடிவமைப்பாளர்கள் | ரூபா 1,000.00 |
| 26. | வாடகை அடிப்படையில் வாகனங்கள் மற்றும் இயந்திராதிகள் வழங்குதல் (பஸ்/ வேன்/ டிப்பர்/ மோட்டர் கிரேடர்) JCB பெகோ இயந்திரம் | ரூபா 1,500.00 |
| 27. | CCTV கெமரா அமைப்பை பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் | ரூபா 1,500.00 |
| 28. | மேடை/ ஹட் வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 29. | சரளைக் கற்கள், மணல், கள்தூள், துண்டுகள், சீப். மெடல் வழங்கல் | ரூபா 1,500.00 |
| 30. | பட்டய பொறியியல் (சிவில்/ மின்) | ரூபா 1,000.00 |
| | **வேலைகள் (நிர்மாண வேலைகள்)** | |
| 1. | 50,000.00 ரூபாவுக்குக் குறைந்த பெறுமதிக்கு | ரூபா 1,000.00 |
| 2. | 100,000.00 ரூபாவுக்குக் குறைந்த பெறுமதிக்கு | ரூபா 2,000.00 |
| 3. | 200,000.00 ரூபாவுக்குக் குறைந்த பெறுமதிக்கு | ரூபா 3,000.00 |
| 4. | 200,000.00 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிக்கு | ரூபா 4,000.00 |
| 5. | 10 இலட்சம் முதல் 20 இலட்சம் ரூபா வரையான பெறுமதிக்கு | ரூபா 5,000.00 |
| 6. | 20 இலட்சம் முதல் 50 இலட்சம் ரூபா வரையான பெறுமதிக்கு | ரூபா 10,000.00 |

பதிவு செய்து கொள்வதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். தேவையானால் கலேவெல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவுக் கட்டணத்தை ''செயலாளர், கலேவெல பிரதேச சபை'' இற்கு காசோலை மூலம் அல்லது காசுக் கட்டளை மூலம் அல்லது சபைக்கு வருகை தந்து செலுத்தலாம். விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-12-31ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நிறைவுறும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

சகல வழங்கல்களையும் கலேவெல பிரதேச சபைக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் இடத்திற்கு வழங்குதல் வேண்டும். 45 நாட்கள் கால எல்லைக்கான கடன் வசதிகளை வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்குதல் வேண்டும். 2024ஆம் வருடத்தில் பதிவு செய்து கொண்டவர்களிடமிருந்தே பொதுவாக விலைகள் கோரப்படும் என்பதுடன் அந்த விலைகள் முழு வருடத்திற்கும் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும். வாகனத் திருத்தவேலைகளைச் செய்வதற்கான நிறுவனங்கள் மத்திய மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்ட மோட்டார் வாகனத் திருத்தகமாகவிருத்தல் விசேட தகைமையாகும்.

- ❖ வழங்குநர் அல்லது வியாபாரத்திற்கு வியாபாரப் பெயர்ப் பதிவு அல்லது அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும். பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
- ❖ பதிவு செய்து கொள்ளல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளல் கலேவெல பிரதேச சபைக்கு உரித்தானது.
- ❖ வெட் வரி சான்றிதழ் உரிமையாளர்கள் அந்தச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும் என்பதுடன் சான்றிதழ் உரிமையாளருக்கு மட்டுமே வெட் வரிகள் செலுத்தப்படும்.
- ❖ அத்தியாவசியத் தேவையின் போது பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை கொண்டுள்ளது.

**கே. அபேரத்ன,**
**செயலாளர்,**
**கலேவெல பிரதேச சபை,**

**தொலைபேசி: 066-2289275**
**2023 ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி.**

## கலேவெல பிரதேச சபை

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர்: ..........................................................................................

முகவரி: ..........................................................................................

தொலைபேசி இலக்கம்: நிலையான:...........................................................

செல்லிட:...........................................................

தொலைநகல்:...........................................................

வழங்கப்படும் வேலை சேவை / பொருள்: ..........................................................

(பலசேவைகள் இருக்கும் போது ஒவ்வொன்றுக்கும் தேவைப்படுமாறு வேறுவேறாக விண்ணப்பப்படிவ இணைப்பைப் பயன்படுத்தவும்)

பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் உள்ள அனுபவம்

01. ..........................................................................................
02. ..........................................................................................
03. ..........................................................................................

வியாபாரப் பதிவிலக்கம்/ அடையாள அட்டை இலக்கம்:..........................................

VAT வரிச் சான்றிதழ் இலக்கம்:..........................................................

(சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)

பதிவுக் கட்டணம் (ரூபா) ..........................................................

காசோலை/ காசுக் கட்டளை/ பற்றுச்சீட்டு இலக்கம்:..........................................

மேற்படி தகவல்கள் சரியானவை எனவும், இயைபுடைய பதிவுச் சான்றிதழ்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். பதிவு செய்வதற்கு இயைபாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

திகதி:.................................... .......................................................

கையொப்பம்

### அலுவலகப் பயன்பாட்டிற்கு

விடயப் பொறுப்பு அதிகாரியின் பரிந்துரை .......................................................

விடயப் பொறுப்பு அதிகாரியின் கையொப்பம்.................................. திகதி: ..........................

செயலாளரின் பரிந்துரை மற்றும் அனுமதி : .......................................................

கையொப்பம்:............................................. திகதி:..........................................

திகதி:..........................................



# பண்டுவஸ்நுவர பிரதேச சபை

## ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் – 2024ஆம் ஆண்டு

பின்வரும் அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2023 செப்டம்பர் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தியதன் பின் 2023.08.24ஆம் திகதி முதல் 2023.09.14ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். ரொக்கப் பணக் கொடுப்பனவுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த கேள்விப் படிவத்தின் மூலப் பிரதி மற்றும் இரண்டாம் பிரதிகளை 2023 செப்டம்பர் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது உரிய நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் ''தலைவர், பண்டுவஸ்நுவர பிரதேச சபை, ஹெட்டிபொல'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை 037 2291075 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**எச்.ஏ.ஜீ. நிஷ்ஷங்க,**
**செயலாளர்,**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை, ஹெட்டிபொல.**
**2023.08.24ஆம் திகதி.**

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை - ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் - 2024ஆம் ஆண்டு**
**அட்டவணை இல. 01**

| தொ. இல. | ஆதனத்தின் பெயர் | குறைந்த பட்ச கேள்வி (ரூபா) | படிவக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | ஹெட்டிபொல வாரச்சந்தை 01ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 178,000.00 | 1,000.00 | 14,240.00 |
| 2 | ஹெட்டிபொல வாரச்சந்தை 02ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 178,000.00 | 1,000.00 | 14,240.00 |
| 3 | ஹெட்டிபொல வாரச்சந்தை 03ஆம் இலக்க நன்னீர் மீன் விற்குமிடம் | 151,200.00 | 1,000.00 | 12,100.00 |
| 4 | ஹெட்டிபொல வாரச்சந்தை 04ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 70,200.00 | 1,000.00 | 7,020.00 |
| 5 | ஹெட்டிபொல வாரச்சந்தை 05ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 70,200.00 | 1,000.00 | 7,020.00 |
| 6 | ஹெட்டிபொல வாரச்சந்தை 06ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 78,000.00 | 1,000.00 | 7,800.00 |
| 7 | ப/கொஸ்வத்த வாரச்சந்தை மீன் விற்குமிடம் | 150,000.00 | 1,000.00 | 12,000.00 |
| 8 | ப/கொஸ்வத்த வாரச்சந்தை 01ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 11,000.00 | 1,000.00 | 1,100.00 |
| 9 | ப/கொஸ்வத்த வாரச்சந்தை 02ஆம் இலக்க மீன் விற்குமிடம் | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 10 | மடிகே மிதியால மீன் விற்குமிடம் | 10,750.00 | 1,000.00 | 1,075.00 |
| 11 | ஹுனகம சந்தி மீன் விற்குமிடம் | 14,500.00 | 1,000.00 | 1,450.00 |
| 12 | கொட்டம்பபிட்டிய மீன் விற்குமிடம் | 125,000.00 | 1,000.00 | 10,000.00 |
| 13 | பரம்பொல சந்தி மீன் விற்குமிடம் | 7,500.00 | 500.00 | 750.00 |
| 14 | ஹிரத்தலான சந்தி மீன் விற்குமிடம் | 12,500.00 | 1,000.00 | 1,250.00 |
| 15 | தஹனெக்கெதர குளத்திற்கு அருகிலுள்ள நன்னீர் மீன் விற்குமிடம் | 8,500.00 | 500.00 | 850.00 |
| 16 | ஹெட்டிபொல வாரச்சந்தை பன்றியிறைச்சிக் கடை | 1,120,000.00 | 1,000.00 | 56,000.00 |
| 17 | விஜய உதாகம வாரச்சந்தை பன்றியிறைச்சிக் கடை | 50,000.00 | 1,000.00 | 5,000.00 |
| 18 | மல்வானேகெதர வாரச்சந்தை பன்றியிறைச்சிக் கடை | 50,000.00 | 1,000.00 | 5,000.00 |
| 19 | ஹெட்டிபொல வாரச்சந்தை கோழியிறைச்சிக் கடை | 385,200.00 | 1,000.00 | 30,820.00 |
| 20 | விஜய உதாகம வாரச்சந்தை கோழியிறைச்சிக் கடை | 100,000.00 | 1,000.00 | 10,000.00 |
| 21 | ஹெட்டிபொல வாரச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,092,305.00 | 1,000.00 | 54,620.00 |
| 22 | ப/கொஸ்வத்த வாரச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 540,000.00 | 1,000.00 | 27,000.00 |
| 23 | மடிகே மிதியால மாட்டிறைச்சிக் கடை | 900,000.00 | 1,000.00 | 45,000.00 |
| 24 | தோரகொட்டுவ மாட்டிறைச்சிக் கடை | 90,000.00 | 1,000.00 | 9,000.00 |
| 25 | ஹெட்டிபொல வாரச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 24,000.00 | 1,000.00 | 2,400.00 |
| 26 | பொது நூலகக் காணியின் கடை அறை | 30,000.00 | 1,000.00 | 3,000.00 |
| 27 | சியம்பலகஸ்வெட்டிய 01ஆம் இலக்க விற்பனை நிலையம் | 8,000.00 | 500.00 | 800.00 |
| 28 | சியம்பலகஸ்வெட்டிய 02ஆம் இலக்க விற்பனை நிலையம் | 7,000.00 | 500.00 | 700.00 |
| 29 | விஜய உதாகம வாரச்சந்தை | 300,000.00 | 1,000.00 | 24,000.00 |
| 30 | ப/கொஸ்வத்த வாரச்சந்தை | 630,000.00 | 1,000.00 | 31,500.00 |
| 31 | பஸ் நிலைய வாகனத் தரிப்பிடம் | 660,000.00 | 1,000.00 | 33,000.00 |
| 32 | புனித நகர வாகனத் தரிப்பிடம் | 120,000.00 | 1,000.00 | 9,600.00 |
| 33 | ஹெட்டிபொல வாரச்சந்தை சிற்றுண்டிச்சாலை | 400,000.00 | 1,000.00 | 32,000.00 |
| 34 | புலத்பொல உணவகம் | 48,000.00 | 1,000.00 | 4,800.00 |
| 35 | ஹெட்டிபொல வாரச்சந்தை பொது மலசலகூடம் | 35,000.00 | 1,000.00 | 3,500.00 |
| 36 | பஸ் நிலைய பொது மலசலகூடம் | 36,000.00 | 1,000.00 | 3,600.00 |
| 37 | குடுகல உயன i காணியின் தேங்காய் விளைச்சல் | 20,000.00 | 1,000.00 | 2,000.00 |
| 38 | குடுகல உயன ii காணியின் தேங்காய் விளைச்சல் | 8,500.00 | 500.00 | 850.00 |
| 39 | வளவ்வத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 5,000.00 | 500.00 | 500.00 |
| 40 | நீதிமன்றம் பின்புறமுள்ள காணியின் தேங்காய் விளைச்சல் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 41 | ஜெமினா பார்க் இல. 01 காணியின் தேங்காய் விளைச்சல் | 5,500.00 | 500.00 | 550.00 |
| 42 | சம்சியா தோட்ட தேங்காய் விளைச்சல் | 7,000.00 | 500.00 | 700.00 |
| 43 | பிகின்ஹில் தோட்ட இல. 01 காணியின் தேங்காய் விளைச்சல் | 25,000.00 | 1,000.00 | 2,500.00 |
| 44 | பிகின்ஹில் தோட்ட இல. 03 காணியின் தேங்காய் விளைச்சல் | 11,000.00 | 1,000.00 | 1,100.00 |
| 45 | ரோஸ் கார்டன் காணியின் தேங்காய் விளைச்சல் | 2,000.00 | 500.00 | 200.00 |
| 46 | போதிமுல்ல காணியின் தேங்காய் விளைச்சல் | 16,000.00 | 1,000.00 | 1,600.00 |
| 47 | ரைகம்வத்த i காணியின் தேங்காய் விளைச்சல் | 5,000.00 | 500.00 | 500.00 |
| 48 | ரைகம்வத்த 02(i) காணியின் தேங்காய் விளைச்சல் | 5,000.00 | 500.00 | 500.00 |
| 49 | ரைகம்வத்த 02(ii) காணியின் தேங்காய் விளைச்சல் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 50 | கொஸ்லந்தவத்த இல. 01 காணியின் தேங்காய் விளைச்சல் | 4,500.00 | 500.00 | 450.00 |
| 51 | கொஸ்லந்தவத்த இல. 02 காணியின் தேங்காய் விளைச்சல் | 2,500.00 | 500.00 | 250.00 |
| 52 | கொஸ்லந்தவத்த 03 காணியின் தேங்காய் விளைச்சல் | 3,800.00 | 500.00 | 380.00 |
| 53 | நெலும்பொக்குண தோட்ட காணியின் தேங்காய் விளைச்சல் | 20,500.00 | 1,000.00 | 2,050.00 |
| 54 | திக்ஹேனவத்த இல. 02 காணியின் தேங்காய் விளைச்சல் | 7,200.00 | 500.00 | 720.00 |
| 55 | எஹட்டுகங்கமுலஹேன i காணியின் தேங்காய் விளைச்சல் | 11,000.00 | 1,000.00 | 1,100.00 |
| 56 | எஹட்டுகங்கமுலஹேன ii காணியின் தேங்காய் விளைச்சல் | 3,000.00 | 500.00 | 300.00 |
| 57 | கட்டுமுலுவ தோட்டக் காணியின் தேங்காய் விளைச்சல் | 4,500.00 | 500.00 | 450.00 |
| 58 | கெபெல்லேவ காணியின் தேங்காய் விளைச்சல் | 7,000.00 | 500.00 | 700.00 |
| 59 | பஸ் நிலையக் காணியின் தேங்காய் விளைச்சல் | 1,100.00 | 500.00 | 110.00 |
| 60 | பட்டகொல்ல கலகாவ தோட்ட காணியின் தேங்காய் விளைச்சல் | 7,000.00 | 500.00 | 700.00 |
| 61 | லீவெரெல்லகங்கமுலஹேன காணியின் தேங்காய் விளைச்சல் | 5,000.00 | 500.00 | 500.00 |
| 62 | கெலியாவ தோட்ட (i) தேங்காய் விளைச்சல் | 11,000.00 | 1,000.00 | 1,100.00 |
| 63 | கெலியாவ தோட்ட (ii) காணியின் தேங்காய் விளைச்சல் | 3,500.00 | 500.00 | 350.00 |
| 64 | செம்சியா தோட்ட தேங்காய் விளைச்சல் | 7,000.00 | 500.00 | 700.00 |
| 65 | கஜுகஹமுலஹே காணியின் தேங்காய் விளைச்சல் | 4,500.00 | 500.00 | 450.00 |
| 66 | ஹெட்டிபொல தோட்டம் எனப்படும் பஸ்வத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 8,000.00 | 500.00 | 800.00 |
| 67 | தொரபாவில தோட்டக் காணியின் தேங்காய் விளைச்சல் | 2,700.00 | 500.00 | 270.00 |
| 68 | ஹன்திஹவ கோன்கஹமுல ஹேன காணியின் தேங்காய் விளைச்சல் | 8,250.00 | 500.00 | 825.00 |
| 69 | கரந்தகஹமுலவத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 5,500.00 | 500.00 | 550.00 |
| 70 | கல்கந்தவத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 8,000.00 | 500.00 | 800.00 |
| 71 | உடஹிபன்பொல காணியின் தேங்காய் விளைச்சல் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 72 | கல்லேஹெபிட்டிய தோட்டக் காணியின் தேங்காய் விளைச்சல் | 700.00 | 500.00 | 70.00 |
| 73 | திசாபதிவத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 6,000.00 | 500.00 | 600.00 |
| 74 | கொமுகொமுவ தோட்டக் காணியின் தேங்காய் விளைச்சல் | 650.00 | 500.00 | 65.00 |
| 75 | நிதன்கலகாவஹேன தோட்டக் காணியின் தேங்காய் விளைச்சல் | 5,500.00 | 500.00 | 550.00 |
| 76 | ஹேனே கேல்ல 01 காணியின் தேங்காய் விளைச்சல் | 5,400.00 | 500.00 | 540.00 |
| 77 | அங்கமுவ தோட்டம் 01 காணியின் தேங்காய் விளைச்சல் | 4,500.00 | 500.00 | 450.00 |
| 78 | ரதஒம்லாவேவத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 79 | அரலியலந்த காணியின் தேங்காய் விளைச்சல் | 2,500.00 | 500.00 | 250.00 |
| 80 | ஹிந்தகொல்லவத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 6,000.00 | 500.00 | 600.00 |
| 81 | கோன்கஹமுலவத்த காணியின் தேங்காய் விளைச்சல் | 4,500.00 | 500.00 | 450.00 |
| 82 | அயேஷாபிட்டிய தோட்டக் காணியின் தேங்காய் விளைச்சல் | 2,600.00 | 500.00 | 260.00 |
| 83 | விலகெதரவத்த i காணியின் தேங்காய் விளைச்சல் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 84 | விலகெதரவத்த ii காணியின் தேங்காய் விளைச்சல் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 85 | மீகஹஹேன காணியின் தேங்காய் விளைச்சல் | 21,000.00 | 1,000.00 | 2,100.00 |
| 86 | பெலதெனிய தோட்ட தேங்காய் விளைச்சல் | 1,800.00 | 500.00 | 180.00 |
| 87 | தோரகொல்ல தலஹேன்யாய இல 01 காணியின் தேங்காய் விளைச்சல் | 5,000.00 | 500.00 | 500.00 |
| 88 | தோரகொல்ல தலஹேன்யாய இல 02 காணியின் தேங்காய் விளைச்சல் | 8,750.00 | 500.00 | 875.00 |
| 89 | லக்கி லேண்ட் தோட்டம் | 3,500.00 | 500.00 | 350.00 |
| 90 | ரைகம் தோட்டம் ii | 3,000.00 | 500.00 | 300.00 |
| 91 | ரைகம் தோட்டம் 03 (i) | 3,000.00 | 500.00 | 300.00 |
| 92 | பிகின்ஹில் தோட்டம் 02 | 3,500.00 | 500.00 | 350.00 |
| 93 | கொஹொம்பகஹமுலஹேன காணி | 2,000.00 | 500.00 | 200.00 |
| 94 | லக்கி லேண்ட் தோட்டம் | 3,000.00 | 500.00 | 300.00 |
| 95 | அங்கமுவ தோட்டம் 02 | 3,000.00 | 500.00 | 300.00 |
| 96 | சமசிய தோட்டம் | 1,000.00 | 500.00 | 100.00 |
| 97 | கிவுல்பிட்டிய காணி | 1,000.00 | 500.00 | 100.00 |
| 98 | கிவுல்பிட்டிய ஹேன காணி | 1,500.00 | 500.00 | 150.00 |

## சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 16ஆவது பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பகினிகஹபில்லேவ யௌவன அனென்யாதார சமிதிய கலைக்கப்பட்டதற்கான அறிவிப்பு

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123 அதிகாரம்) விதிகளின் கீழ் '15.06.1993' அன்று பதிவு செய்யப்பட்ட 'வரையறுக்கப்பட்ட பகினகஹபில்லேவ யௌவன அனென்யாதார சமிதிய' கலைப்பதற்கு விருப்பம் தெரிவித்து சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 16 (1) (ஈ) பிரிவின் கீழ் சங்கத்தின் உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கினர் விருப்பம் தெரிவித்து கலைப்பதற்காக சட்ட ரீதியாக ஆவணங்கள் முன்வைத்துள்ளனர் எனவும்.

இந்த வர்த்தமானி வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் உறுப்பினர்களால் அல்லது சங்கத்தின் நிதியின் மீது அக்கறையுள்ள அல்லது அங்கு உரிமையுள்ள வேறொருவரினால் சங்கம் கலைக்கப்பட்டதை ரத்து செய்ய சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டால் அல்லது அதில் ஏதேனும் ஆர்வம் இருந்தால் கூறப்பட்ட கலைப்பு அதன் மூலம் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

மேலும் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 16 (3) (ஊ) இன் படி சங்கத்தின் கலைப்பை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அது தொடர்பான அறிவிப்பு அது ஆரம்பிப்பதற்கு ஏழு நாட்களுக்குக் குறையாத காலத்திற்கு முன்னர் அதை எடுக்கும் நபரால் கலைக்கப்பட்டதை ரத்து செய்யும் ஏதேனும் உத்தரவு ஏற்பட்டால் அது தொடர்பான அறிவிப்பு, அத்தகைய உத்தரவின் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதன் அறிவிப்பு சங்கத்தால் பதிவாளருக்கு அனுப்பப்படும்.

**சங்கங்களின் பதிவாளர்**

**2023 ஜுலை மாதம் 07 நாளில்**
**இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**
**கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில்**

---

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**கொழும்பு ஹொரண வீதியில் (B-084) 25+152KM TO 25+175KM (RHS) என்ற இடத்தில் தடுப்புச் சுவரொன்றை நிர்மாணித்தல்.**

| ஒப்பந்த இலக்கம் | வேலையின் விபரம் | தேவைப்படும் CIDA தரப் பதிவு |
|---|---|---|
| RDA/KD/CE/W/2023/10 | கொழும்பு ஹொரண வீதியில் (B-084) 25+152km TO 25+175km (RHS) என்ற இடத்தில் தடுப்புச் சுவரொன்றை நிர்மாணித்தல். | C6/C7 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் கொழும்பு ஹொரண வீதியில் (B-084) 25+152Kkm TO 25+175Kkm (RHS) என்ற இடத்தில் தடுப்புச் சுவரொன்றை நிர்மாணிப்பதற்காக விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஒகஸ்ட் 24 ஆம் திகதிலிருந்து 2023 செப்டம்பர் 14 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ/ நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/08/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/09/14 மற்றும் 2023/09/15 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

skills

---

(இணைப்பு 01)

## 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் சொத்து செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல

கீழே பெயர் குறிப்பிடப்படும் நபர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்டவிரோத செயற்பாடொன்றின் மூலம் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாடொன்றின் மூலம் பெற்றுக்கொண்ட பணத்தில் பெற்றுக்கொண்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளதால் மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8 பிரிவின் பிரகாரம் 2023.06.26 முதல் ஹோமாகம உயர் நீதிமன்றத்தின் இல. SPL/02/2023 இன் கீழ் செயற்பாடற்றதாக்கப்பட்டுள்ளது.

இல. 16, சிங்ஹபுர, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர என்ற முகவரியில் ஹெட்டியாராச்சிகே ஸ்ரீயானி என்பவரின் பெயரில் உள்ள கீழுள்ள வாகனங்கள் ND2105 பஸ், QN-8488 முச்சக்கர வண்டி, BIN-9332 மோட்டார் சைக்கள்

இல. 16/ஏ, சிங்ஹபுர, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர முகவரியில் கல்கெட்டி கமகே பிரசந்தி நில்மினி பெரேரா என்வரின் பெயரில் உள்ள வாகனங்கள் 31-4729 ஜீப், QB-3467, QD-3465 முச்சக்கர வண்டி, WT-3676, BAW-9361, BGN-8312 மோட்டார் சைக்கிள்

மேற்படி சொத்து சம்பந்தமாக உரிமை கோரலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கிறேன்.

நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்

**பதிவாளர்,**
**ஹோமாகம உயர் நீதிமன்றம்.**

---

## சிறந்த தங்க நகைகளின் ஏலவிற்பனை

வ/ப இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளாக செயற்படும் வ/ப களனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கீழே பெயர் குறிப்பிடப்படும். கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.04.01 முதல் 2022.06.30 வரை அடகு வைக்கப்பட்டு 2023.10.01 வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2023.10.01 முற்பகல் 9.00 இற்கு பியகம வீதியில் சிங்ஹாரமுல்லவில் அமைந்துள்ள வ/ப களனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**கிளைகள்:-**

| | | |
|---|---|---|
| *வெதமுல்ல* | *பேலியகொட* | *களனி* |
| *வனவாசல* | *பேலி/பட்டிய* | *ஹிம்புட்டுவெல்கொட* |
| *பொல்ஹேன* | *திப்பிட்டிகொட* | *தொரணசந்தி* |

**தலைவர்**
**வ/ப களனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**பியகம வீதி, சிங்ஹாரமுல்ல, களனி.**
**தொ.பே. இலக்கம்: 0112911356/ 2987069**

---

**பெயர் மாற்றம்**

வத்தளை, ஹுனுப்பிட்டிய, ராஜசிங்ஹ மாவத்தையைச் சேர்ந்த பரிமளகாந்தன் பிரதீப் டில்ஷான் ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை முஹம்மத் தில்ஷான் என மாற்றியுள்ளேன் அத்துடன் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**- முஹம்மத் தில்ஷான்**

---

## விலை மனுக்கோரல்
### மாவட்ட செயலகம் - புத்தளம்

அரசாங்கத்தின் 2022/ 2023 பெரும் போக நெற் கொள்வனவு திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களால் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த மற்றும் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் அரிசியினை விற்பனை செய்வதற்காக தகைமையான கொள்வனவாளர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| விலை மனு இல. | அரிசியின் வகை | உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவு (மெ.தொ) | உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் அரிசியின் அளவு (மெ.தொ) |
|---|---|---|---|
| PU/PR/SEL/23/37 | வெள்ளை நாடு | 0.5 | - |
| | சிவப்பு நாடு | 8.5 | - |
| | வெள்ளை பச்சை | | 17,1625 |
| | மொத்தம் | 9 | 17,1625 |

02 விலை மனு ஆவணங்களினை 24.08.2023 வியாழக்கிழமை முதல் 07.09.2023 வியாழக்கிழமை மு.ப.9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை புத்தளம் மாவட்டச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையிலோ அல்லது புத்தளம் இலங்கை வங்கியிலோ மீள்செலுத்த முடியாத தொகையான ரூ.500.00 வினை செலுத்தி மாவட்டச் செயலகத்தின் கொள்முதல் அலகில் பெற்றுக்கொள்ளலாம்..

03. விலை மனு ஆவணங்களினை முத்திரை இடப்பட்ட உறையில் இட்டு, உறையின் இடது பக்க மேல் மூலையில் விலை மனு இலக்கம் மற்றும் "அரிசிக்கான விலை மனு" ஆகியவற்றை குறிப்பிட்டு 08.09.2023 வெள்ளிக்கிழமை பி.ப. 2:00 மணிக்கு கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் / மாவட்ட செயலாளர், திணைக்களக் கொள்முதல் சபை, மாவட்டச் செயலகம், புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது மாவட்டச் செயலகத்தின் கொள்வனவு அலகில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடுதல் வேண்டும். பிற்பகல் 2.00 மணி நிறைவடைந்த உடனே மாவட்டச் செயலக கொள்முதல் அலகில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

04. விலை மனு முற்-கூட்டம் 01.09.2023 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

05. மனுதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி விலை மனு திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.

06. மேலதிக தகவல்களை புத்தளம் மாவட்ட செயலக தொலைபேசி இல. 032-2266322 மற்றும் 032-2265335 வழியூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**2023.08.24**

**எச்எம்.எஸ்.பி.ஹேரத்**
**தவிசாளர்/ மாவட்ட செயலாளர்**
**திணைக்கள கொள்முதல் சபை**
**மாவட்ட செயலகம்**
**நிர்வாக மாவட்டம், புத்தளம்**

---

## களனி பல்கலைக்கழகம்
### மருத்துவ பீடம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**களனி பல்கலைக்கழக, மருத்துவ பீடத்தில் Wi-Fi வலையமைப்பின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்**

1. ராகம, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீடத்தில் Wi-Fi வலையமைப்பின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து களனி பல்கலைக்கழக, மருத்துவ பீடத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளவாறு அனைத்து அவசியமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை கையளிக்கப்பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   **ICTAD** பதிவு **- (EM) ICTAD Grade EM 3** அல்லது அதற்கு மேல்.
5. இலங்கையில் செல்லுபடியான தொடர்புடைய வர்த்தகப் பதிவை பெற்றிருப்பது ஒப்பந்தம் வழங்குவதற்கான தகைமைக்கு தேவையான தகுதியில் உள்ளடங்கும்.
   விலைமனுதாரர்கள் இதனையொத்த WLAN தீர்வுகளை செயற்படுத்தியதில் ஐந்து வருட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு தீர்வுக்காக பயன்படும் உபகரணங்களுக்காக சான்று பெற்ற குறைந்தது இரு பொறியியலாளர்களை பணியில் அமர்த்தியிருத்தல் வேண்டும். கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்தில் ரூபா 10,000,000.00 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை பெறுமதிக்கு குறைந்தது நான்கு கம்பியில்லா வலையமைப்பை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   அணுகல் புள்ளிகளின் (Access Points) உற்பத்தியாளர்கள் கடந்த 03 ஆண்டுகளுக்கான கம்பி மற்றும் பம்பியில்லா அணுகல் உட்கட்டமைப்புகளுக்கான Gartner Magic Quadrant இன் 'Leader' **quadrant** இன் பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரக்குறிப்பு தாள்களில் குறிப்பிடப்பட்டவாறு கம்பியில்லா அணுகல் புள்ளிகள், ஸ்விட்ச்கள், ட்ரான்ஸீவர்கள், கண்ணாடி இழைக் கேபிள்கள், UTP கேபிள்கள், மற்றும் ஏனைய உருப்படிகளுக்காக உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதத்தை (MAL) சமர்ப்பித்தல் வேண்டும்.
6. தொழில்நுட்ப தகவல்களை பணிப்பாளர்/ICT (தொ. இல. 0112910163) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு 2023 ஆகஸ்ட் 24ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 12ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை ராகம-11010, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
   ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 10,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஆகஸ்ட் 24ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 12ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் ராகம, களனி பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணத்தை ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. இந்த விலைமனு இரட்டைக் கடித உறை முறையில் மேற்கொள்ளல் வேண்டும்.
   அ) விலைமனுதாரர்கள் இரு வெவ்வேறு கடித உறைகளில் தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகின்றனர்.
   ஆ) கடித உறை 1: இதில் பின்வருவன உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்
      i. முத்திரை பொறிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவொன்று,
      ii. விலைமனு பிணை மற்றும்
      iii. மேற்கூறப்பட்ட 5ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் (தகுதிக்கான தேவைகள்).
   இ) கடித உறை 2: இதில் நிதி முன்மொழிவு உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களின் மதிப்பீடு:
   அ) விலைமனுதாரர்கள் இன்றி, தொழில்நுட்ப குழுவினால் கடித உறை 1 திறக்கப்பட்டு தகுதிக்கான தேவைகள் மதிப்பிடப்படும்.
      i. தகைமைக்கான தேவைகளை பூர்த்தி செய்திராத விலைமனுதாரர்கள் தகுதி இழப்பு செய்யப்படுவர்.
      ii. தகைமை தேவைகளை பூர்த்தி செய்த விலைமனுதாரர்களின் தொழில்நுட்ப முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்படும்.
   ஆ) தொழில்நுட்ப முன்மொழிவுக்கான குறைந்தபட்ச புள்ளிகளைப் பெறாத விலைமனுதாரர்கள் தகுதி இழப்பு செய்யப்படுவர்.
   இ) தமது தொழில்நுட்ப முன்மொழிவுகளுக்கான குறைந்தபட்ச புள்ளிகளுக்கு மேல் பெறும் விலைமனுதாரர்களின் கடித உறை 2 விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படுவதோடு அவர்களின் நிதி முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்படும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை தலைவர் பெறுகைக் குழு, மே/பா சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவ பீடம், களனி பல்கலைக்கழகம், ராகம என முகவரி இடப்பட்டு 2023 செப்டெம்பர் 13ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் ராகம, தலகொல்ல வீதி. களனி பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், நிதிப் பிரிவின் விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் (கடித உறைகளின் இடது பக்க மூலையில் ஒப்பந்தத்தின் பெயரை குறிப்பிடல் வேண்டும்). தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். நேரில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கையில் இயங்கும் (இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி) வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட 2023 ஜனவரி 13 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் நிலையான படிவங்கள் பிரிவு (VIII) இல் உள்ளடக்கப்பட்ட விலைமனு பிணையின் படிவத்தை பயன்படுத்தி 360,000.00 ரூபாவிற்கான விலைமனு பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது மருத்துவ பீடத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு பண வைப்பை மேற்கொள்ளல் வேண்டும்.
11. கடிதவுறை 1: தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் கடிதவுறை 2: நிதி முன்மொழிவைத் தெளிவாக அங்கீகரிப்பதாக கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**சிரேஷ்ட பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
2023.08.24

---

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு**
## கட்டிடங்கள் திணைக்களம்
## கேள்விகளுக்கான அழைப்பு

**ஹப்புத்தளையிலுள்ள மாவட்ட தொழிலாளர் அலுவலகத்தின் பொதுமக்கள் காத்திருக்கும் பிரதேசத்தை விஸ்தரித்தல், தரவு வலையமைப்பு முறைமைக்கு மேலதிக பகுதியை சேர்த்தல் மற்றும் சட்ட அதிகாரிகள் அறை மற்றும் பொதுப் பணியாளர் உணவு அறையை மேம்படுத்துதல்**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்ட 13.3 மில்லியன் ரூபா மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட ''ஹப்புத்தளையிலுள்ள மாவட்ட தொழிலாளர் அலுவலகத்தின் பொதுமக்கள் காத்திருக்கும் பிரதேசத்தை விஸ்தரித்தல், தரவு வலையமைப்பு முறைமைக்கு மேலதிக பகுதியை சேர்த்தல் மற்றும் சட்ட அதிகாரிகள் அறை மற்றும் பொதுப் பணியாளர் உணவு அறையை மேம்படுத்துதல்'' வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 05) தலைவர் கோருகிறார்.
   நிர்மாணக் காலம் 182 நாட்களாகும்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iv)ஆம் மற்றும் 2020/03ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிடத் நிர்மாணத் துறைக்காக C7, C6 அல்லது C5 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை *(Original Certificate of PCA 03)* கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது''
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கண்டி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 05), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
   தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 081-2236653, தொலைமடல்: 081-2234255
5. மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரம் ரூபா (4,000.00) தொகையை 2023-08-24ஆம் திகதி முதல் 2023-09-07ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கண்டி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 05), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2023-09-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 05), பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டிடங்கள் திணைக்களம், கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இதே முகவரியில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 199,000.00 ரூபா தொகைக்கு
   * 2023 டிசம்பர் 23ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. ஏ.எம். விக்கிரமசிங்க,**
**நிர்மாணப் பணிப்பாளர் (பிராந்தியம் 1),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்லை**
**www.buildings.gov.lk.**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## சுற்றாடல் அமைச்சு

**விவசாய, வனவியல் மற்றும் ஏனைய நிலப்பயன்பாட்டுத் துறைகளில் (AFOLU) மேம்பட்ட வெளிப்படைத்தன்மைக் கட்டமைப்பிற்கான செயற்திட்டத்திற்கு ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்**

இலங்கை 1993 ஆம் ஆண்டு முதல் காலநிலை மற்றும் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் (UNFCCC) அங்கம் வகிப்பதுடன் 2016 ஆம் ஆண்டில் பெரில் உடன்படிக்கையையும் ஏற்றுக் கொண்டுள்ளது. பெரில் உடன்படிக்கையின் 13வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்த்தல் (MRV) தொடர்பான திட்டமிடப்பட்ட மேம்பட்ட வெளிப்படைத்தன்மைக் கட்டமைப்பை (ETF) விருத்தி செய்ய வேண்டி உள்ளது. மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை கட்டமைப்பிற்கான வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (MPGகள்) UNFCCC ஆல் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்படி, சுற்றாடல் அமைச்சு UNFCCC இன் தேசிய மையப் புள்ளியாக இருப்பதால் இலங்கையில் AFOLU துறைக்கான MRV அமைப்பு மற்றும் ETF ஐ நிறுவ எதிர்பார்க்கிறது.

உலகளாவிய சுற்றாடல் வசதி (GEF) வெளிப்படைத்தன்மைக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகள் (CBIT) மூலம் ETF நிதிக்கு இனங்க அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் திறன்களை உருவாக்க நிதி உதவி வழங்குகின்றது. இந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து AFOLU துறையில் காலநிலை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக மேற்கண்ட திட்டத்தை இலங்கை உருவாக்கியுள்ளது.

சுற்றாடல் அமைச்சு மேற்கூறப்பட்ட திட்டத்தை செயற்படுத்தும் அமைப்பாக இருப்பதால், பின்வரும் ஆலோசகர்களுக்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| | | |
|---|---|---|
| அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்த்தல் (MRV) ஆலோசகர் | - | ஒரு பதவி |
| நிதி மற்றும் பெறுகை ஆலோசகர் | - | ஒரு பதவி |

மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடம் தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு சுற்றாடல் அமைச்சு வேண்டுகின்றது. சுருக்கமான சுய விபரங்கள் சகிதம் விண்ணப்பங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகனை 2023 செப்டம்பர் 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பணிப்பாளர், காலநிலை மாற்றச் செயலகம் (6 ஆம் தளம்), ''சொபாதம் பியச'', 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விண்ணப்பிக்கும் பதவியை'' தயவு செய்து குறிப்பிடவும்.

மேற்கூறப்பட்ட ஆலோசகர்களுக்கான குறிப்பு விதிமுறைகள் மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகளுக்கான வடிவங்களை www.climatechange.lk மற்றும் www.env.gov.lk எனும் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**செயலாளர்**
**சுற்றாடல் அமைச்சு**
**பத்தரமுல்ல.**

# இங்கிலாந்து செல்லும் இலங்கை 16 பேர் மகளிர் குழாம் அறிவிப்பு




எதிர்வரும் இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கான 16 பேர் கொண்ட இலங்கை மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து மகளிர் அணிக்கு எதிரான மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடுவதற்காகவே இலங்கை அணி இங்கிலாந்து செல்லவுள்ளது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 30 தொடக்கம் செப்டெம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதில் ஒருநாள் சர்வதேச போட்டிகள் 2025 மகளிர் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறுவதற்கான ஐ.சி.சி மகளிர் சம்பியன்சிப் தொடரின் அங்கமாகவே இடம்பெறவுள்ளது.

அறிவிக்கப்பட்டிருக்கும் இலங்கை குழாத்தில் அண்மையில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் பங்கேற்ற அணியில் இருந்து ஒரே மாற்றமாக அச்சினி குலசூரிய காயத்தில் இருந்து மீண்டு அணிக்குத் திரும்பியுள்ளார். தவிர நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் பங்கேற்ற 15 வீராங்கனைகளும் இந்தக் குழாத்தில் இடம்பெற்றுள்ளனர். சாமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை அணி முதல் முறையாகவே இருதரப்பு தொடர் ஒன்றில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: சாமரி அத்தபத்து (தலைவி), ஓஷதி ரணசிங்க (உப தலைவி), ஹர்ஷிதா சமரவிக்ரம, விஷ்மி குணரத்ன, நிலக்ஷி டி சில்வா, கவீஷா டில்ஹாரி, இனோகா ரணவீர, சுகந்திகா குமாரி, அனுஷ்கா சஞ்சீவனி (வி.கா.), உதேசிகா பிரபோதனி, அச்சினி குலசூரிய, காவ்யா காவிந்தி, இனோஷி பெர்னாண்டோ, ஹன்சிமா கருணாரத்ன, ஹசினி பெரேரா, இமேஷா துலானி.

# சமீரவுக்கு பதில் ராஜித்த




எதிர்வரும் ஆசிய கிண்ணத் தொடரில் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உபாதை காரணமாக விலகும் நிலையில் அவருக்கு பதில் கசுன் ராஜித்த இலங்கை அணியில் இணைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் முடிவுற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரில் தோள்பட்டை காயத்திற்கு உள்ளாகி இருக்கும் சமீர, எதிர்வரும் உலகக் கிண்ண போட்டிக்கு தயாராகும் வகையிலேயே ஆசிய கிண்ணத் தொடரில் இருந்து விலகியுள்ளார். எனினும் ஆசிய கிண்ணத் தொடருக்காக தேர்வு செய்யப்பட்டிருக்கும் இலங்கை குழாம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இந்த வாரம் இடம்பெறும் பயிற்சிப் போட்டிக்கு பின்னர் நாளை (25) இலங்கை குழாம் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் லங்கா பீரிமியர் லீக் தொடரின்போது உபாதைக்கு உள்ளான வனிந்து ஹசரங்கவும் அணியில் இடம் பெறுவதில் சந்தேகம் உள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் ஒருநாள் வடிவத்தில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ணப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# யாழ். மத்தியை வென்றது ஏறாவூர் அலிகார் மத்தி

ஏறாவூர் சுழற்சி நிருபர்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் 20 வயதுக்கு உட்பட்ட கால்பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி அணி 6–4 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (22) பி குழுவுக்காக நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் சரிசமமாக மோதிக்கொண்டபோதும் அலிகார் மத்தி அணி ஆதிக்கம் செலுத்தியது. இதன்மூலம் முதல் பாதியில் 3–2 என முன்னிலை பெற்ற அலிகார் அணி இரண்டாவது பாதியில் எதிரணிக்கு இரண்டு கோல்களை விட்டுக் கொடுத்த நிலையில் மேலும் மூன்று கோல்களை பெற்று வெற்றியீட்டியது.

அலிகார் மத்திய கல்லூரி இந்தத் தொடரில் ஆடும் இரண்டாவது போட்டி இதுவாகும். அந்த அணி முதல் போட்டியில் கொழும்பு சாஹிரா கல்லூரியிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரண செய்திக்கு ஹீத் 'விளையாட்டாக' பதில்



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹீத் ஸ்ட்ரீக், உயிரிழந்ததாக செய்திகள் பரவிய நிலையில், தான் நலமுடன் இருப்பதாக முன்னாள் வீரர் ஹென்றி ஒலோங்காவிடம் ஹீத் தெரிவித்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹீத் ஸ்ட்ரீக் சிகிச்சை பலனளிக்காமல் கடந்த திங்கட்கிழமை (21) உயிரிழந்ததாக உலகம் முழுவதும் செய்தி பரவியது.

முன்னாள் சிம்பாப்வே வீரரும் ஹீத்தின் நண்பருமான ஹென்றி ஒலோங்காவும், ட்விட்டர் பக்கத்தில் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் பழைய ட்வீட்டை நீக்கிய ஹென்றி, ஹீத் நலமுடம் இருப்பதாக பதிவிட்டு அவருடன் வாட்ஸ்அப்பில் உரையாடிய ஸ்கிரீன் ஷொட்டையும் பகிர்ந்துள்ளார்.

அந்த வாட்ஸ்அப் உரையாடலில், "நான் மிகவும் நலமாக இருக்கிறேன். ரன்அவுட்டை உடனடியாக திரும்பப் பெறுங்கள் நண்பா" என்று ஹீத் விளையாட்டாக தெரிவித்திருந்தார்.

ஸ்ட்ரீக் சிம்பாப்வே அணிக்காக 65 டெஸ்ட், 189 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 4933 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு 455 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். 2005ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ஸ்ட்ரீக், பல்வேறு அணிகளுக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசிய விளையாட்டு விழா:

# மெய்வல்லுனர் விளையாட்டுகள் சுகததாசவில் இன்று ஆரம்பம்



நாற்பத்து ஏழாவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வான மெய்வல்லுனர் போட்டிகள் சுகததாச விளையாட்டரங்கில் இன்று (24) ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஒன்பது மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 760 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவிருப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த போட்டிகளில் பங்கேற்பவர்களில் 409 வீரர்கள் மற்றும் 351 வீராங்கனைகள் உள்ளடங்குகின்றனர்.

பெண்களுக்கான 10000 மீற்றர் ஓட்டப் போட்டியின் இறுதிப் போட்டியுடன் இன்று போட்டிகள் ஆரம்பமாகவிருப்பதோடு தொடர்ந்து ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப்போட்டி இடம்பெறவுள்ளது. ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டி மற்றும் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் இறுதிப் போட்டியும் இன்று இடம்பெறவுள்ளது.

தவிர பெண்களுக்கான முப்பாய்ச்சல் மற்றும் பரிதிவட்டம் எறிதல் இறுதிப் போட்டிகளும் இன்று இடம்பெறவுள்ளன.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியும் அடங்கும்.

இதனைத் தொடர்ந்து ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 3.30க்கு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இடம்பெறும். தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இலங்கை இளையோர் அணி அறிவிப்பு




மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடருக்கான இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு றோயல் கல்லூரி துடுப்பாட்ட வீரர் சினெத் ஜயவர்தன தலைமையிலான இலங்கை இளையோர் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிச்மண்ட் கல்லூரி சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரர் மல்ஷ திருப்பத்தி 2 இளையோர் டெஸ்ட் மற்றும் 3 இளையோர் ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடருக்கு உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இளையோர் குழாத்தில் கண்டி திரித்துவ கல்லூரி, கொழும்பு புனித பேதுரு கல்லூரி மற்றும் வென்னப்புவ புனித ஜோசப் லாஸ் கல்லூரிகளைச் சேர்ந்த தலா இரு வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கடைசியாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற முக்கோண தொடரில் பங்கேற்கச் சென்ற இளையோர் குழாத்தின் ஒன்பது வீரர்கள் இந்த 20 பேர் கொண்ட அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை இளையோர் அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்பதற்காக மேற்கிந்திய தீவுகள் இளையோர் அணி ஏற்கனவே இலங்கை வந்துள்ளது. கொழும்பு, சி.சி.சி மைதானத்தில் நாளை (25) நடைபெறவுள்ள பயிற்சி போட்டியுடன் இந்த சுற்றுப்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் ஓகஸ்ட் 27 தொடக்கம் செப்டெம்பர் 1 ஆம் திகதி வரை தம்புள்ளையில் நடைபெறவுள்ளதோடு 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் செப்டெம்பர் 5 தொடக்கம் 15 ஆம் திகதி வரை அதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை இளையோர் குழாம்: சினெத் ஜயவர்தன (தலைவர்), மல்ஷ திருப்பத்தி (உப தலைவர்), விஷ்வ ராஜபக்ஷ, தினுர கலுபஹன, விஹாஸ் தவ்மிக்க, கருக சங்கெத், விஷ்வ லஹிரு, கவீஷ பியுமால், பத்தும் மலித்த, புலிந்து பெரேரா, ரவிஷான் நெத்சர, ருசந்த கமகே, ருவிஷான் பெரேரா, ஷருஜான் ஷன்முகநாதன், விஷேன் ஹலம்பகே, ஹிரான் ஜயசுந்தர, தினிரு அபேவிக்ரமசிங்க, ஜனித் பெர்னாண்டோ, சுபுன் வாதுகே, தரன விமலதர்ம

# ரயில் பாலம் இடிந்து 26 தொழிலாளர்கள் பலி



இந்தியாவின் மிசோரம் மாநிலம் சாய்ராங் பகுதிக்கு அருகே கட்டப்பட்டு வந்த ரயில் பாலம் ஒன்று நேற்று (23) இடிந்து விழுந்ததில் 26 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

மிசோரம் மாநிலத்தின் வடகிழக்கே உள்ள சிராங் கரில் இந்த விபத்து நிகழ்ந்ததாக அந்த மாநில முதலமைச்சர் சொரம் தங்கா தெரிவித்துள்ளார்.

இந்தப் பாலம் இடிந்து விழும்போது அங்கு 40 பேர் வரை பணியாற்றிக் கொண்டிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டபோதும் அங்கு 28 பேரே இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"இதுவரை 13 சடலங்களை மீட்பாளர்களால் மீட்க முடிந்துள்ளது. எஞ்சிய சடலங்களை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது." என்று மாநில பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்த உயர்மட்ட விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக வடகிழக்கு ரயில்வே நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் பரந்துபட்ட ரயில்வே அமைப்பை தினசரி பல மில்லியன் மக்கள் பயன்படுத்துகின்றனர். ரயில் போக்குவரத்தை நவீனப்படுத்தும் முயற்சியாக அதிவேக ரயில் போக்குவரத்து திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் நடைபெறுவதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளித்து வருவதாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

இவ்வாண்டு ஜுன் மாதத்தில் பீஹார் மாநிலத்தில் உள்ள தொங்கு பாலம் சரிந்துவிழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

## சர்வதேச செய்திகள்

# 1,200 அடி உயரத்தில் தொங்கிய 8 பேர் மீட்பு



பாகிஸ்தான் பள்ளத்தாக்கில் கம்பிவண்டியில் சுமார் 12 மணிநேரம் அந்தரத்தில் சிக்கியிருந்த 8 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். இவர்களில் 6 பேர் பாடசாலை மாணவர்களாவர்.

கடந்த செவ்வாய் (22) காலை அவர்கள் பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்தபோது அந்தக் கம்பிவண்டி பாதி வழியில் பழுதாகியது. சுமார் 1,200 அடி உயரத்தில் சிக்கிக்கொண்ட அவர்களுக்கு உணவு, தண்ணீர், மருந்து ஆகியவை ஹெலிகொப்டர் மூலம் வழங்கப்பட்டன.


முதலில் இரு பிள்ளைகள் ஹெலிகொப்டரில் மீட்கப்பட்டனர். இருண்டுவிட்டதால் எஞ்சியோர் சிப்லைன் மூலம் கம்பிவண்டி தொங்கிக்கொண்டிருந்த கயிற்றின் வழி காப்பாற்றப்பட்டனர்.

அந்த 6 பாடசாலை மாணவர்களும் பதின்ம வயதுச் சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் பாடசாலை மலைப்பகுதியில் இருப்பதாகவும் அங்கு செல்ல பாதுகாப்பான பாதை ஏதும் இல்லாததால் கம்பிவண்டியைப் பயன்படுத்துவது வழக்கம் என்றும் பாடசாலை அதிபர் கூறினார்.

பாகிஸ்தானில் மலைப்பகுதிகளில் உள்ள அனைத்துக் கம்பிவண்டிகளையும் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. பாதுகாப்பற்றவை உடனடியாக மூடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிரேக்கத்தில் காட்டுத் தீ: 18 அகதிகள் உயிரிழப்பு



கிரேக்க தலைநகர் ஏதன்ஸுக்கு அருகில் துருக்கி நாட்டு எல்லையை ஒட்டிய எவ்ரோஸ் பிராந்தியத்தில் 20 உயிர்களை காவுகொண்ட காட்டுத் தீ கட்டுப்பாட்டை இழந்து தொடர்ந்து பரவி வருகிறது.

இதில் அண்மையில் எல்லையை கடந்து அலெக்சான்ட்ரோபோலிஸ் நகரின் வடக்கு வனப் பகுதியில் ஒளிந்திருந்த அகதிகள் மற்றும் தஞ்சக் கோரிக்கையாளர்கள் 18 பேர் உயிரிழந்தவர்களில் உள்ளனர்.

துருக்கி எல்லைக்கு நெருக்கமாக இருக்கும் டடியா வனப் பகுதியில் இடம்பெற்றிருக்கும் உயிரிழப்புகளுக்கு கிரேக்கம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

ஐந்து நாட்களாக நீடித்துவரும் இந்த காட்டுத் தீயில் நகருக்கு அருகாமை பகுதிகள் மற்றும் கடற்கரையுடன் சேர்ந்த மேற்குப் பகுதி அழிந்துள்ளன. தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு படையினர் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

40 பாகை செல்சியஸை தொட்டிருக்கும் வெப்பம் மற்றும் கடுமையான காற்று தீயை மேலும் தீவிரமாக பரவச் செய்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழைய ஆபத்தான பயணத்தை மேற்கொள்ளும் அகதிகள் மற்றும் தஞ்சக் கோரிக்கையாளர்கள் ஏற்கனவே கடலில் மூழ்கி உயிரிழப்புகளை சந்தித்திருக்கும் நிலையில் தற்போது காட்டுத் தீ ஆபத்துக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 24ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.